


# தினபூமி

thinaboomi.com




கோவை, வெள்ளி, நவம்பர் 22, 2024 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 08 ₹ 3.00



**கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை மூலம் உக்ரைன் மீது ரஷ்ய படை தாக்குதல்**

...2-ம் பக்கம்

**அமெரிக்காவில் வழக்கு: அதானியை கைது செய்ய ராகுல்காந்தி வலியுறுத்தல்**

...3-ம் பக்கம்

**பார்டர்-கவாஸ்கர் டிராபி தொடர்: இந்திய - ஆஸி. அணிகள் மோதும் முதல் டெஸ்ட் இன்று தொடக்கம்**

...7-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று, தலைமைச் செயலகத்தில் மும்பை - கலைஞர் தமிழ் சங்கத்தின் தலைவர் சேசுராசு, செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன், அன்பழகன், நிர்வாக குழு உறுப்பினர் வில்சன் ஆகியோர் சந்தித்து மும்பையில் 8.12.2024-ம் தேதி நடைபெறவுள்ள கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினர்.

### திருவள்ளூரில் ரூ.330 கோடியில் புதிய டைடல் பூங்கா:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்

## புதிதாக 6 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்

சென்னை, நவ. 22-

**திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் 21 தளங்களுடன் 5.57 லட்சம் சதுரடி பரப்பளவில் ரூ.330 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய டைடல் பூங்காவை இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார். இந்த டைடல் பூங்கா மூலம் சுமார் 6 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திருமுடிவாக்கத்தில் துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை முதல்வர் திறந்து வைக்கிறார்.**

### 11.41 ஏக்கரில்...

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது., தமிழ்நாட்டின் வடபகுதியிலுள்ள நகரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை கொண்டு செல்லும் நோக்கத்துடன் திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் 11.41 ஏக்கர் பரப்பளவில், 330 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் 5.57 லட்சம் சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள டைடல் பூங்காவை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (22.11.2024) திறந்து வைக்கிறார்.

### அனைத்து வசதிகள்...

இக்கட்டிடத்தில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்பட தேவையான, நவீன தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயர ழுத்த மும்முனை மின் இணைப்பு மற்றும் மின் இயக்கி வசதிகள், மின்தூக்கி வசதிகள், சுகாதார வசதிகள், தீ பாதுகாப்பு மற்றும் கட்டட மேலாண்மை வசதிகள், சிசிடிவி கேமரா வசதிகள், 24X7 பாதுகாப்பு வசதிகள், உணவகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்ற அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டிடமானது, 6,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையிலும் பசுமை கட்டிட வழிமுறைகளின்படியும் கட்டப்பட்டுள்ளது.

### ஒதுக்கீட்டு ஆணை...

பட்டாபிராமில் இப்புதிய டைடல் பூங்கா அமைக்கப்படுவதன் மூலம் தமிழ்நாட்டின் வடபகுதியைச் சார்ந்த, குறிப்பாக திருவள்ளூர் உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுவதுடன் அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும். டைடல் பூங்கா திறப்பு விழாவின்போது, பல்வேறு தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அப்பூங்காவில் தள ஒதுக்கீட்டுக்கான ஆணைகளையும் முதல்வர் வழங்க உள்ளார். பட்டாபிராமில் அமைக்கப்பட்டுள்ள இந்த டைடல் பார்க் மூலம் 6 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

### தொழில்நுட்ப மையம்...

அதனைத் தொடர்ந்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக 18.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார். இப்பெருங்குழும திட்டத்தின் முதல் பகுதியாக 18.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13.33 கோடி ரூபாய் மானியத்துடன் வடிவமைப்பு மையம், மறு பொறியியல் பரிசோதனைக் கூடம், சேர்க்கை உற்பத்தி மையம், மேம்பட்ட பயிற்சி மையம், காப்புரிமை பதிவு வசதி மையம், நவீன பரிசோதனை மையம் போன்றவை நிறுவப்பட்டுள்ளன.

### அரசு மானியத்துடன்...

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள 14-க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டை சங்கத்தினரால் இணைந்து உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கு ஊர்தி மூலம் அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் பொது வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், இளம் தலைமுறை பொறியாளர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்படுத்தி பயன் பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு

# அதானி நிறுவனத்துடன் எந்த தொடர்பும் இல்லை

## சமூக ஊடகங்களில் பரவும் தகவல் தவறு

## அமைச்சர் செந்தில்பாலாஜி விளக்கம்

சென்னை, நவ. 22-

**தமிழ்நாட்டின் மின்சார வாரியத்திற்கும் அதானி நிறுவனத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என அமைச்சர் செந்தில் பாலாஜி கூறியுள்ளார். மேலும் இதுதொடர்பாக வெளியான செய்திக்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.**

கவுதம் அதானி மீது அமெரிக்காவில் வழக்கு தொடரப்பட்டதன் எதிரொலியாக அதானி குழுமத்தைச் சேர்ந்த நிறுவனப் பங்குகள் கடும் சரிவுடன் வர்த்தகமாகி வருகிறது. இதன்படி அதானி எண்டர்பிரைசஸ் 19 சதவீதமும், அதானி போர்ட்ஸ் 15 சதவீதமும் சரிவை சந்தித்துள்ளன. அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டு உள்ள வழக்கில், தமிழ்நாடு, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களின் பெயர்கள் இடம்பெற்று உள்ளன.

இதைத் தொடர்ந்து அதானி விவகாரத்தில் தமிழக அரசு தனது நிலையை தெளிவுபடுத்த வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கூறியிருந்தார். இது தொடர்பாக மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்து அவர் கூறியதாவது;

தமிழ்நாடு மின்சார வாரியத்தை பொறுத்தவரை அதானி நிறுவனத்தோடு எந்த விதமான வணிக ரீதியான தொடர்பும் கடந்த 3 ஆண்டுகளாக இல்லை என்பதை தெளிவுப்படுத்திக் கொள்கிறேன். சமூக ஊடகங்களில் தவறான தகவல் பரவி வருகிறது. தமிழ்நாட்டின் மின் தேவையை கருத்தில் கொண்டு மத்தியில் இருக்கக் கூடிய மத்திய மின்சாரத்துறை வாரியத்தின் அமைப்புகளோடு 1500 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அந்த நிறுவனத்துடன் தான் தமிழ்நாடு மின்சார வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆப் இந்தியா" என்பது மத்திய அரசின் நிறுவனம். இந்த நிறுவனத்தோடு தமிழ்நாடு மின்சார வாரியம் 1500 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. அதுவும் மிக குறைந்த விலையில், அதாவது ரூ.2.61 க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எனவே, அதானி நிறுவனத்தின் மீதான குற்றச்சாட்டுகளுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இது தொடர்பாக மேலும் சந்தேகம் இருந்தால் அதை தெளிவுப்படுத்த தமிழக அரசு தயாராக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஜனாதிபதி திரௌபதி முர்மு 27-ம் தேதி நீலகிரி வருகை

## கண்காணிப்பு பணிகள் தீவிரம்

ஊட்டி, நவ. 22-

**திருவாரூர் மத்திய பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா மற்றும் நீலகிரி மாவட்டம் குன்னூர் ராணுவ கல்லூரியில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்க ஜனாதிபதி திரௌபதி முர்மு வருகிற 27-ம் தேதி தமிழகம் வருகிறார்.**

இதற்காக அவர் அன்றைய தினம் காலை டெல்லியில் இருந்து விமானம் மூலம், கோவை சூலூர் விமானப் படை தளத்திற்கு வருகிறார். பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் ஊட்டி தீட்டுக்கல் பகுதிக்கு செல்கிறார். அங்கிருந்து கார் மூலம் ஊட்டியில் உள்ள ராஜ்பவனுக்கு செல்லும் ஜனாதிபதி திரௌபதி முர்மு அங்கு தங்கி ஓய்வெடுக்கிறார்.

மறுநாள் 28-ம் தேதி (வியாழக்கிழமை) காலை ஜனாதிபதி ஊட்டி ராஜ்பவனில் இருந்து கார் மூலமாக குன்னூருக்கு செல்கிறார். ராணுவ அதிகாரிகள் பயிற்சி பெறும் கல்லூரிக்கு செல்லும் அவர் அங்கு நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்று பயிற்சி அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகிறார். நிகழ்ச்சி முடிந்ததும் மீண்டும் ஊட்டி ராஜ்பவன் சென்று தங்குகிறார்.

வரும் 29-ம் தேதி (வெள்ளிக்கிழமை) ஊட்டி ராஜ்பவனில் நீலகிரி வாழ் பழங்குடி மக்களை ஜனாதிபதி திரௌபதி முர்மு சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது. ஊட்டி நிகழ்ச்சிகளை முடித்து கொண்டு வருகிற 30-ம் தேதி (சனிக்கிழமை) ஹெலிகாப்டர் மூலம் கோவை வந்து, அங்கிருந்து விமானம் மூலமாக திருச்சி விமான நிலையத்திற்கு செல்கிறார்.

பின்னர் அங்கிருந்து திருவாரூர் சென்று, அங்கு தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் நடக்க உள்ள பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்குகிறார். பட்டமளிப்பு முடிந்ததும், மீண்டும் திருச்சி வந்து, அங்கிருந்து விமானம் மூலமாக டெல்லி பயணிக்கிறார்.

ஜனாதிபதி வருகையை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் மாவட்ட எஸ்.பி. நிஷா, மாவட்ட வன அலுவலர் கவுதம் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் போலீசார் சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது, பொதுப்பணித்துறை சார்பில் ராஜ்பவனில் அடிப்படை வசதிகள் மேற்கொள்வது, நகராட்சி சார்பில் தூய்மை பணி மேற்கொள்வது, சாலை சீரமைப்பு செய்வது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்த நிலையில், தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளத்தை சீரமைக்கும் பணிகள் நேற்று முன்தினம் தொடங்கி உள்ளது. அங்கு ஹெலிகாப்டர் தளம் தூய்மைப்படுத்தப்பட்டு வருகிறது.மேலும் போலீசார், வெடிகுண்டு நிபுணர்கள் ஹெலிகாப்டர் தளத்தில் மெட்டல் டிடெக்டர் உதவியுடன் அங்குலம், அங்குலமாக சோதனையும் மேற்கொண்டனர்.

அங்கு 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீசாரும் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளத்தை சுற்றியுள்ள பகுதியில் வெளியாட்கள் நுழையவும் போலீசார் தடை விதித்தனர்.

ஜனாதிபதி வருகையையொட்டி நீலகிரி மாவட்டத்தில் 750-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். இதற்கான முன்னேற்பாடு பணிகளை போலீசார் மேற்கொண்டு வருகிறார்கள்.

### தமிழக கடலோர மாவட்டங்களில் உஷார் நிலை:

# அந்தமான் பகுதியில் உருவானது வளிமண்டல மேலடுக்கு சுழற்சி

## வரும் 26, 27-ம் தேதிகளில் மிக கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, நவ. 22-

**வங்கக்கடலில் உருவாகி உள்ள மேலடுக்கு சுழற்சியானது பெங்கல் புயலாக தீவிரமடையலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழக கடலோர மாவட்டங்களில் உஷார் படுத்தப்பட்டுள்ளன.**

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. கேரள கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இந்நிலையில் தெற்கு அந்தமான் பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் உருவான சுழற்சி தமிழகம் மற்றும் இலங்கை கடற்பகுதியை நோக்கி நகரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உருவாகி உள்ள வளிமண்டல சுழற்சி நாளை (23-ம் தேதி) காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெறும் என்றும், மேற்கு வட மேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இரண்டு நாட்களில் வலுப்பெறும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கு அதி கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை மையம் ரெட் அலர்ட் விடுத்திருந்தது. மேலும் வங்கக்கடலில் நாளை (நவ.23ம் தேதி) காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளது என்றும் இந்திய வானிலை மையம் தெரிவித்திருந்தது.

மேலும் நவ.25-ம் தேதி தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளதாகவும், நவ.26,27-ம் தேதிகளில் தமிழ்நாட்டில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்திருந்தது.

காற்றழுத்தத்தாழ்வு மண்டலம் வலுவிழந்துவிட்டால் பெரிய அளவில் பிரச்சினை இருக்காது. ஆனால், தற்போதைய சுழற்சி படிப்படியாக வலுப்பெற்று புயலாக மாறினால் இலங்கை மற்றும் தமிழகத்தின் கிழக்கு கடலோர பகுதிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

வங்கக்கடலில் புயல் உருவானால், அது இந்த சீசனில் உருவான இரண்டாவது புயலாக இருக்கும். இந்த புயலுக்கு பெங்கல் என பெயரிடப்படும். இந்த பெயரை சவுதி அரேபியா முன்மொழிந்துள்ளது.

பெங்கல் புயல் தமிழக தலைநகர் சென்னைக்கு அதிக அளவு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது, புயல் சென்னையை கடந்து செல்வதற்கு அதிக வாய்ப்பு உள்ளது என ஒரு சில வானிலை பதிவர்கள் கூறி உள்ளனர். சுழற்சியின் வேகத்தை வைத்து அடுத்த சில நாட்களுக்கான மழை முன்னறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

புயலாக உருவெடுக்கும் பட்சத்தில் அதன் வேகம் மற்றும் திசையைப் பொருத்து மழையின் தாக்கம் இருக்கும். எனவே, வங்கக் கடலில் நிலவும் வானிலையை, அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

தமிழக கடலோர பகுதி மக்களும், வானிலை தொடர்பான அறிவிப்புகளை கவனித்து வருகின்றனர்.

# அதானி மீது வழக்குப்பதிவு

நியூயார்க், நவ. 22-

**சூரிய மின்சாரம் விநியோகம் தொடர்பாக பிரபல தொழில் அதிபர் அதானி மீது அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது**

சூரிய மின்சாரம் விநியோகம் தொடர்பாக அதானி மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனினும், தனது தவறை அமெரிக்க முதலீட்டாளர்களிடம் மறைத்து, அதானி தனது திட்டத்திற்காக பெரும் தொகையை திரட்டினார் என்றும் குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது. இது குறித்து நியூயார்க் பெடரல் கோர்ட்டில் அமெரிக்கா வழக்கு ஒன்று தொடர்ந்துள்ளது. இதுதொடர்பாக 6 பேர் மீதும் அமெரிக்கா புகார் அளித்துள்ளது. இதே புகாரில் அமெரிக்கா பங்கு பரிவர்த்தனை ஆணையமும் அதானி மீது வழக்கு தொடர்ந்துள்ளது.


முன்னதாக, அதானி குழுமம், பல்வேறு நிதி முறைகேடுகளில் ஈடுபட்டு, தங்கள் நிறுவன பங்குகளை போலியாக அதிகரிக்க செய்வதாக அமெரிக்காவை தலைமையிடமாக வைத்து செயல்படும் பிரபல முதலீட்டு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியிட்டு இருந்தது. இது முதலீட்டாளர்கள் மத்தியில் பெரும் விவாதத்திற்குள்ளானது.

**மார்க்கெட் விலை நிலவரம்**




BSE -422.59 பாயிண்ட் 77,155.79

NSE -168.80 பாயிண்ட் 23,349.90



**தங்கம்**
1 சவரன் ₹57,160
1 கிராம் ₹7,145



**வெள்ளி**
1 கிலோ ₹101,000
1 கிராம் ₹101.00

**டாலர்** ₹84.47

**பெட்ரோல்** ₹100.75

**டீசல்** ₹92.34



### கண்டம் விட்டு கண்டம் பாயும்
# ஏவுகணை மூலம் உக்ரைன் மீது ரஷ்ய படை தாக்குதல்

**கீவ், நவ. 22-**

போரில் முதல் முறையாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஐ.சி.பி.எம்.(ICBM) ஏவுகணையை ரஷியா பயன்படுத்தியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

ரஷியா-உக்ரைன் போர் 2 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கிறது. இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கு நாடுகள் பொருளாதார மற்றும் ராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன. அதே சமயம் ரஷியா, தொடர்ந்து தனது தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. குறிப்பாக போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது தொடர்பான புதிய கொள்கைக்கு ரஷிய அதிபர் புதின் சமீபத்தில் ஒப்புதல் அளித்தது பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் போரில் ரஷியாவுக்கு உதவுவதற்காக வடகொரிய ராணுவ படைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், போரில் முதல் முறையாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஐ.சி.பி.எம்.(ICBM) ஏவுகணையை ரஷியா பயன்படுத்தியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக உக்ரைன் விமானப்படை வெளியிட்டுள்ள தகவலின்படி, ரஷியாவின் அஸ்திராகான் பகுதியில் இருந்து உக்ரைனின் மத்திய கிழக்கு பகுதியில் உள்ள டிரிப்ரோ நகரை குறிவைத்து ஐ.சி.பி.எம். ஏவுகணை ஏவப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

உக்ரைன் மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு பகிரங்க எச்சரிக்கை விடுக்கும் வகையில் ரஷியா இவ்வாறு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை கொண்டு தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் என்பவை 5,000 கிலோ மீட்டர்களுக்கும் மேலாக பறக்கும் திறன் கொண்ட ஏவுகணைகளாகும். நீண்ட தொலைவுக்கு சென்று தாக்கும் வல்லமை கொண்ட இந்த ஏவுகணை, அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனினும், ரஷியா அணு ஆயுதம் இல்லாத ஏவுகணையை கொண்டே தாக்குதல் நடத்தியுள்ளது. அணு ஆயுதங்களை பயன்படுத்த புதின் ஒப்புதல் அளித்த நிலையில், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை கொண்டு ரஷியா தாக்குதல் நடத்தியிருப்பது பதற்றத்தை அதிகரித்துள்ளது.

### இஸ்ரேல்-ஹமாஸ் போர்;
# காசாவில் உயிரிழப்பு 44 ஆயிரத்தை தாண்டியது

**காசா, நவ. 22-**

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது.

இதற்கு பதிலடியாக காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் அரசு போர் தொடுத்தது. சுமார் 13 மாதங்களாக நடந்து வரும் மோதலில், காசா முனையில் இதுவரை 44,056 பேர் உயிரிழந்து உள்ளதாக காசா சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் 1,04,268 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போரில் உயிரிழந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் எனவும், உயிரிழந்தவர்கள் பலரின் உடல்கள் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியிருக்க கூடும் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் எனவும் காசா சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதே சமயம், போரில் உயிரிழந்த ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் எண்ணிக்கையை தனித்தனியாக காசா சுகாதாரத்துறை அமைச்சகம் அறிவிக்கவில்லை. இதற்கிடையில், இஸ்ரேல் தரப்பில் போரில் இதுவரை ஹமாஸ் ஆயுதக்குழுவை சேர்ந்த 17 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 2026-ல் தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் பணியை எடப்பாடி பழனிச்சாமி கையில் எடுப்பார்
### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேட்டி

**மதுரை, நவ 22-**

2026-ல் தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் பணியை எடப்பாடி பழனிச்சாமி கையில் எடுப்பார் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்தார்.



அ.தி.மு.க. 53-வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 6 -ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் விளாங்குடி சித்தன் தலைமையில் புதுவிளாங்குடி காமாட்சி நகரில் அ.தி.மு.க.கொடியினை ஏற்றி நிர்வாகிகள் மற்றும் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், எம்.ஜி.ராமச்சந்திரன், வி.பி.ஆர்.செல்வகுமார், கவுன்சிலர் நாகஜோதி சித்தன், நீதிகாந்த், மலர்விழி மற்றும் வட்ட செயலாளர்கள் பி.என்.சுந்தர்ராஜன், கறிக்கடை மலைச்சாமி, சேகவன், விஜய குமார், நாராயணன், ஜஸ்டிஸ்ராஜா மற்றும் ஐ.டி. விங்க் கந்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

53 அடி உயர கழக கொடியை ஏற்ற காவல்துறையின் அனுமதி கேட்டபோது அனுமதி மறுத்தது. அத்துமீறி கொடியேற்றினால் கைது செய்யப்படுவீர்கள் என காவல்துறையினர் கூறினார்கள். அ.தி.மு.க. இதற்கெல்லாம் அஞ்சாது. 53 அடி உயர கொடி ஏற்றுவதான் மூலம் என்ன ஆக போகிறது.?.வகுப்பறையில் பெண்ஆசிரியர் படுகொலை செய்யப்படுகிறார். நீதிமன்ற வாசலில் வழக்கறிஞர் வெட்டப்படுகிறார். தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சீர்கெட்டு உள்ளது என நீதிபதிகள் இன்றைக்கு ஒவ்வொரு முறையும் தி.மு.க. அரசிற்கு கொட்டு வைக்கிறார்கள்.

கள்ளச்சாராயம் விவகாரத்தில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சிபிஐ விசாரணை தேவை என கூறி இருக்கிறது. எஸ்பி அலுவலகம் அருகே உள்ள போது கள்ளச் சாராயம் விற்பனை நடைபெற்றது குறித்து நீதிபதிகள் கேள்வி எழுப்பி வருகின்றனர். ஆர்.எஸ்.பாரதி கூறுவது போல திமுக அரசு குறித்து எந்த நீதிபதியும் பாராட்டவில்லை. தேர்தலுக்கு இன்னும் ஒன்னரை ஆண்டுகள் உள்ளது. நம் மக்களிடம் எப்படி சந்தித்து ஓட்டு கேட்பது என தி.மு.க.வினர் குழம்பி போய் இருக்கிறார்கள். அந்த அளவிற்கு விலைவாசி, உயர்வு சட்ட ஒழுங்கு சீர்கேடு தமிழகத்தில் நிலைவி வருகிறது.

தமிழகத்தில் இந்த ஆட்சி வந்ததிலிருந்து தமிழகத்திற்கு விடியலே இல்லை. இந்த ஆட்சியை உடனடியாக வீட்டுக்கு அனுப்பவே வேண்டும். அதற்கான பணியை எடப்பாடிபழனிச்சாமி கையில் எடுப்பார்.அ.தி.மு.க. ஆட்சியில் கள்ளச்சாராயம் குறித்து உயிரிழப்பு அதிகரித்ததா.? மோசமான சட்ட ஒழுங்கு சீர்கெட்டு இருந்ததா.? ஆர்.எஸ்.பாரதி அண்ணே ஊருக்காக எல்லாம் சொல்லாதீங்க., உண்மை ஊருக்கு சொல்லுங்க அண்ணே.

கஸ்தூரி ஒரு திரைப்பட நடிகை, அவரது மகன் 12 வயது மகன் ஆட்டிசம் குறைபாடு உள்ளவர். அவரது மகனை அவர்தான் பாதுகாக்க வேண்டும். மேலும் தி.மு.க.வினர் பேசாத பேச்சா கஸ்தூரி பேசியிருக்கிறார். கஸ்தூரியை பிடிப்பதற்கு காவல்துறையினர் இரண்டு தனிப்படை அமைத்து அவரை டெல்லியில் பிடித்திருக்கிறது என்கிறார். ஆனால், செந்தில் பாலாஜி பிடித்து சிறையில் ஓர் ஆண்டு காலம் இருந்தாலும் அவரது தம்பியை இதுவரை தமிழக காவல்துறையினர் பிடிக்கவில்லையே.? சமூக வலைதளத்தில் ஆயிரம் சொல்லுவார்கள்.? விஜயுடன் கூட்டணி என எங்கள் பொதுச்செயலாளர் கூட்டணி தெரிவித்தாரா.? அல்லது விஜய் கூட்டணி குறித்து அறிவித்தாரா.? ஒரு இளைஞர் கட்சியை தொடங்குகிறார் அதற்கு நாங்கள் அவரை வரவேற்றோம்.சகோதரர் திருமாவளவன் போர்குணம் மிக்கவர். சமீப காலமாக தி.மு.க.வுடன் கூட்டணி காரணமாக அழுத்தத்தின் காரணமாக இது போன்று திருமாவளவன் பேசுகிறார்.

கட்சி நிர்வாகிகள் பொதுக்கூட்டத்தில் ஆயிரம் பேசுவார்கள்., நான் கூட பேசாததை பேசியதாக தனியார் தொலைக்காட்சி நிறுவனம் கூட நான் பேசியதாக வெளியிட்டுள்ளது. இது அதிமுக கட்சிப்பா. நான்தான் என்று எந்த அதிமுக தொண்டனும் சொல்ல மாட்டான். இது குறித்து அவதூறு பரப்பப்படுகிறது. கழகம் கொடியேற்றுங்கள் பணிக்குழு அமைத்து தேர்தலுக்கான பணிகளை தொடங்க பொதுச் செயலாளர் உத்தரவிட்டு அதற்கான பணிகளும் நடைபெற்று வருகிறது. 2026 தேர்தலுக்கு அ.தி.மு.க. தேர்தல் பணிகளை ஏற்கனவே தொடங்கி விட்டோம். எங்கள் ஆட்சியில் பள்ளி மாணவர்களுக்கு சைக்கிள், மடிக்கணினி ஆகியவற்றை கொடுத்தோம். ஆனால், இன்றைக்கு திமுக ஆட்சியில் பீர், கஞ்சா ஆகியவற்றை பள்ளி மாணவர்களுக்கு சப்ளை செய்கிறது.53 அடி உயர கழகக் கொடியை ஏற்ற இருந்த நிலையில், காவல்துறையினர் அனுமதி மறுத்ததால் 25 அடி உயரத்தில் கழகக் கொடியை ஏற்றி வேதனையில் இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

### இஸ்ரேல் பிரதமருக்கு
# நெதன்யாகுக்கு எதிராக கைது வாரண்ட்: சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவு

**ஆம்ஸ்டர்டாம், நவ. 22-**

இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது வாரண்ட் பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது.

இதற்கு பதிலடியாக காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் அரசு போர் தொடுத்தது. ஓராண்டை கடந்து நடந்து வரும் மோதலில் காசா பகுதியில் 44 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர். மேலும் லட்சக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். இந்த போரால் காசாவில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் முற்றிலுமாக சீர்குலைந்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் இஸ்ரேலின் முன்னாள் பாதுகாப்புத் துறை மந்திரி யோவ் காலண்ட் ஆகியோருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது வாரண்ட் பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது. அந்த உத்தரவில், நெதன்யாகு மற்றும் காலண்ட் ஆகியோர், காசா மக்களுக்கு தேவையான உணவு, குடிநீர், மருந்துகள் ஆகியவற்றின் விநியோகத்தை உள்நோக்கத்துடன் வேண்டுமென்றே தடை செய்து, போர் குற்றம் இழைத்ததற்கான சான்றுகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கைது வாரண்ட் உத்தரவு ரகசியமாக வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஆனால் தற்போது வரை இந்த கைது வாரண்ட்டில் கூறப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்ந்து நடந்து வருவதால் இதனை பொதுவெளியில் வெளியிட முடிவு செய்ததாகவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்த உத்தரவுக்கு எதிராக இஸ்ரேல் தரப்பில் முன்வைக்கப்பட்ட மேல்முறையீட்டை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு நிராகரித்துள்ளது.

இந்த உத்தரவின் மூலம் நெதன்யாகு மற்றும் யோவ் காலண்ட் ஆகியோர் சர்வதேச அளவில் தேடப்படும் நபர்களாக அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது. இதனால் 13 மாத மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கான போர்நிறுத்த பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்படவும் வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் இஸ்ரேலும், அதன் முக்கிய கூட்டாளியான அமெரிக்காவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பினர்களாக இல்லாததால், இந்த உத்தரவின் நடைமுறை தாக்கம் குறையலாம் என்று கூறப்படுகிறது.

# ஐஸ்லாந்தில் 7வது முறையாக வெடித்து சிதறிய எரிமலை

**கிரின்டவிக் (ஐஸ்லாந்து), நவ. 22-**

ஐஸ்லாந்தின் ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள எரிமலை ஓராண்டில் 7வது முறையாக வெடித்து சிதறியது.

தென்மேற்கு ஐஸ்லாந்தில் உள்ள ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள எரிமலை நேற்று முன்தினம் மாலை வெடிக்க தொடங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஓராண்டில் ஏழாவது வெடிப்பு ஆகும். நில அதிர்வு நடவடிக்கைகளை கண்காணிக்கும் ஐஸ்லாந்தின் வானிலை அலுவலகத்தின் கூற்றுப்படி, நேற்று முன்தினம் மாலை வெடிக்க தொடங்கிய எரிமலை, இரவு 11:14 மணிக்கு 3 கிமீ (1.8 மைல்) நீளமுள்ள பிளவை உருவாக்கியது என்றும் ஆனால் இந்த வெடிப்பு ஆகஸ்ட் மாதத்தில் வெடித்ததை விட கணிசமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எரிமலை வெடிப்பால் விமானப் போக்குவரத்துக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படுத்தவில்லை என்றாலும், அருகிலுள்ள கிரின்டாவிக் நகரம் உள்பட தீபகற்பத்தின் சில பகுதிகளில் எரிவாயு எச்சரிக்கை குறித்து அதிகாரிகள் எச்சரித்து வருகின்றனர். தலைநகர் ரெய்க்ஜாவிக்கின் தென்மேற்கே 50 கிமீ (30 மைல்) தொலைவில் உள்ள 3,800 மக்கள் வசிக்கும் நகரமான கிரின்டாவிக் அருகே மீண்டும் மீண்டும் ஏற்படும் எரிமலை வெடிப்புகள் உள்கட்டமைப்பு மற்றும் உடைமைகளை சேதப்படுத்தியுள்ளன, மேலும் பல குடியிருப்பாளர்கள் தங்கள் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

**22-11-2024**




**மேஷம்:-** அனைவரையும் சந்தேகக் கண்ணோடு பார்க்க நேரும். தாயின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டிய நாள். பயமின்றி முழு முயற்சி செய்து முன்னேறுங்கள்.

**ரிஷபம்:-** எதிலும் வெற்றிக் கனியைப் பறிப்பீர்கள். வாக்குவன்மையால் வருமானம் அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு, கல்வியில் தேர்ச்சி போன்ற நற்பலன்களை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்:-** எதிர்பார்த்த பணவரவுகள் தாமதப்படும். உறவுகளோடு வீண் வாதங்களைத் தவிர்த்தால் இல்லத்தில் அமைதி நிலவும். காரியங்கள் கைகூட கடின உழைப்புத் தேவை.

**கடகம்:-** தொழில், வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். இனிய பேச்சால் எல்லோரையும் கவர்ந்திடுவீர்கள். பல வழிகளிலும் வருமானங்கள் சீராக உயரும். அரசியல் ஆதாயங்கள் ஏற்படும்.

**சிம்மம்:-** தொழிலில் முதலீடுகளைக் குறைப்பது நல்லது. தீயவழிகளில் தேவையற்ற செலவுகளைச் செய்ய வேண்டியது வரும். சிலருக்கு இடமாற்றமும், பணமுடையும் ஏற்படலாம்.

**கன்னி:-** எல்லா விதத்திலும் ஏற்றம் தரும் நாள். தங்கள் தனித் திறமைகளை வெளிப்படுத்தி பணிபுரியும் இடத்தில் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**துலாம்:-** உங்கள் தீவிர முயற்சியால் தனவரவு அதிகரிக்கும். அரசு உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபங்கள் ஏற்படும். நேர்மையுடன் தொழில் செய்தால் அதிக இலாபம் காணலாம்.

**விருச்சிகம்:-** தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். புத்திர பாக்கியம் ஏற்படும். இறையருளால், வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு:-** கோபத்தைக் குறைத்து, நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், வீட்டில் குழப்பங்கள் உண்டாகும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் முன்னேற்றம் உண்டு.

**மகரம்:-** எதிர்பார்ப்புக்கும் மேலான அதிக தனவரவு இருக்கும். மனதில் மகிழ்ச்சியும் தெம்பும் அதிகரிக்கும். இனிய பேச்சால் எதிரியையும் வசமாக்குவர். வாகனயோகமும், சிறுதூரப் பயணங்களும் மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:-** விரும்பிய பொருட்கள் வீடுவந்து சேரும். எல்லா வளமும் பெருகும். இனிய சுற்றுலாப் பயணங்களால் இன்பம் பெருகும். பெண்ணின் சிநேகமும், தனக்கெனத் தனி வீடும் அமையும்.

**மீனம்:-** மனச் சோர்வும், உடற்சோர்வு ஏற்படும். பயணங்களில் தடைகள் ஏற்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும். என்னதான் கடினமாக உழைத்தாலும் நல்ல பெயர் எடுக்க முடியாது.

### கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கு
# சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டதற்கு ஓ.பன்னீர்செல்வம் வரவேற்பு

**சென்னை, நவ. 22-**

விஷ சாராய வழக்கினை சி.பி.ஐ.க்கு மாற்றிய சென்னை ஐகோர்ட்டின் தீர்ப்பு வரவேற்கத்தக்கது என்று ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.,

கள்ளக்குறிச்சியில், விஷ சாராயம் அருந்தி 67 பேர் உயிரிழந்த வழக்கினை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு அமர்வு, விஷ சாராயம் தயாரிப்பவர், விற்பனையாளர் மற்றும் காவல் துறையினருக்கு மத்தியில் தொடர்பு இருப்பதாகவும், சி.பி.சி.ஐ.டி., நியாயமான, பாரபட்சமற்ற விசாரணையை மேற்கொள்ளாது என்றும் தெரிவித்து, இந்த வழக்கினை மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு மிகவும் வரவேற்கத்தக்கது. இந்தத் தீர்ப்பின் மூலம் திறமையற்ற ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்பதும், இதுதான் தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு சீரழிவுக்குக் காரணம் என்பதும் தெளிவாகி உள்ளது. இந்தத் தீர்ப்பு குறித்து பேட்டி அளித்துள்ள சட்டத் துறை அமைச்சர், சுப்ரீம்கோர்ட்டில் மேல்முறையீடு செய்யும்போது முறையான வாதங்களை எடுத்துரைத்து தடுத்து நிறுத்துவோம் என்றும், மேல் முறையீட்டுக்கு எப்போது செல்வது என்பதை முதல்வர் முடிவு செய்வார் என்றும் கூறி இருப்பது தி.மு.க.வின் நடவடிக்கை மீது பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று உண்மையிலேயே தி.மு.க.வுக்கு அக்கறை இருக்குமானால், சென்னை ஐகோர்ட்டின் தீர்ப்பினை ஏற்று, மேற்படி வழக்கினை மத்திய புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்க வேண்டும். இதைச் செய்யாமல், சட்ட வல்லுநர்களுடன் கலந்து பேசி சுப்ரீம்கோர்ட்டில் மேல் முறையீடு செய்வது குறித்து முதல்வர் முடிவெடுத்து விரைவில் அறிவிப்பார் என்று சொல்வது குற்றவாளிகளுக்கு உதவி புரிவது போல் உள்ளது. இது கடும் கண்டனத்துக்குரியது.

இது மட்டுமல்லாமல், கள்ளக்குறிச்சி விஷ சாராய உயிரிழப்பு வழக்கு மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டால், காலதாமதம் ஏற்படும் என்று சட்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஏதோ, சி.பி.சி.ஐ.டி. காலதாமதமின்றி அனைத்து வழக்குகளையும் விசாரிப்பது போல அமைச்சரின் கூற்று உள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் 38 பேர் பலி

**இஸ்லாமாபாத், நவ. 22-**

பாகிஸ்தானில் சமீப காலமாக பயங்கரவாத தாக்குதல் பல மடங்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக ஆப்கானிஸ்தானில் தலீபான்கள் ஆட்சிக்கு பிறகு அங்குள்ள பயங்கரவாதிகள் பாகிஸ்தானுக்குள் ஊடுருவி அடிக்கடி தாக்குதலை நடத்துகின்றனர். எனவே கைபர் பக்துங்க்வா, பலுசிஸ்தான் ஆகிய எல்லையோர மாகாணங்களில் ராணுவம் கண்காணிப்பை பலப்படுத்தி உள்ளது.

இந்தநிலையில், ஆப்கானிஸ்தான் பகுதியை ஒட்டியுள்ள கைபர் பக்துங்க்வா மாகாணத்தின் குர்ரம் மாவட்டத்தில் பயங்கரவாதிகள் வாகனங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி உள்ளனர். கைபர் பக்துங்க்வான் தலைநகரான பராச்சினாரிலிருந்து பெஷாவர் நோக்கி சென்ற பயணிகள் வாகனங்கள் மீது பயங்கரவாதிகள் திடீரென துப்பாக்கி சூடு நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதலில் 8 பெண்கள் மற்றும் 5 குழந்தைகள் உட்பட 38 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

# சர்வதேச சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும்: ஆசியான் மாநாட்டில் ராஜ்நாத் சிங் வலியுறுத்தல்

**லாவோஸ், நவ. 22-**

சர்வதேச பிரச்னைகளுக்கு தீர்வு காண இந்தியா பேச்சுவார்த்தையை விரும்புகிறது. சர்வதேச சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும் என ஆசியான் மாநாட்டில் பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசினார்.

பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆசியான் மாநாட்டில் பங்கேற்பதற்காக, தென்கிழக்கு ஆசிய நாடான லாவோசுக்கு சென்றுள்ளார். அங்கு நேற்று ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்று பேசியதாவது:

எல்லை தகராறுகள், வர்த்தக ஒப்பந்தங்கள் போன்ற உலகளாவிய சவால்களை அணுகுவதில் அமைதியான பேச்சுவார்த்தையை இந்தியா விரும்புகிறது. சர்வதேச சட்டத்துடன் முழுமையாக ஒத்துப்போக வேண்டும்.

அவற்றை கடைப்பிடிக்க வேண்டும். நாடுகள் பரஸ்பரம் கருத்துகளை மதிக்கும் போது மட்டுமே, உலகளாவிய பிரச்னைகளுக்கு தீர்வுகளை அடைய முடியும் என இந்தியா நம்புகிறது. இந்தோ-பசிபிக் பகுதியில் அமைதியை மேம்படுத்துவதற்கு இந்தியா துணை நிற்கிறது. இவ்வாறு பேசினார்.

# சவுதி அரேபியாவில் ஒரே ஆண்டில் 101 பேருக்கு மரண தண்டனை

**ரியாத், நவ. 22-**

சவுதி அரேபியாவில் கடுமையான சட்டத்தால் இதுவரை இல்லாத அளவிற்கு இந்த ஒரே ஆண்டில் 101 பேருக்கு மரணத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்கள் சென்று பணம் சம்பாதிப்பதில் சவுதியை தான் பலரும் தேர்வு செய்கின்றனர். இந்தியர்களும் அதிகம் செல்லும் நாடாக சவுதி உள்ளது. இங்கு இஸ்லாமிய சட்டங்கள் மிக கடுமையானதாக உள்ளது. குற்றம் புரிந்தவர்களுக்கு குற்றம் நடந்த இடத்தில் கடும் தண்டனை விரைவில் வழங்கப்படுவது வழக்கம்.

இந்த 2024-ல் 101 பேருக்கு மரணத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. போதை மருந்து கடத்தல் ஈடுபட்டவர்களே அதிகம் ஆவர். 2022, 2023 ஆண்டுகளை ஒப்பிடுகையில் இது போன்ற தண்டனை பெறுபவர்கள் இந்த ஆண்டு 3 மடங்கு அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு தண்டனை பெற்றவர்களில் பாகிஸ்தானியர்களே அதிகம் அடங்குவர். தண்டனை பெற்ற வெளிநாட்டவர்கள் விவரம் வருமாறு:

பாகிஸ்தான் - 21 பேர், ஏமன் நாட்டவர்கள் - 20 பேர், சிரியா- 14 பேர், நைஜீரியா- 10 பேர், எகிப்து- 9 பேர், ஜோர்டன், எத்தியோப்பியா தலா 8 பேர், இந்தியா, ஆப்கானிஸ்தான், சூடான் நாட்டவர்கள் தலா 3 பேர் என 101 பேர் மரணத்தண்டனை பெற்றுள்ளனர்.

# 16 வயதுக்குட்பட்டவர்கள் வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்கும் புதிய சட்டம் ஆஸ்திரேலியாவில் அமல்

**சிட்னி, நவ. 22-**

ஆஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைதளங்களை பார்க்க தடை விதிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் புதிய சட்டம் ஒன்றை அந்நாட்டு அரசு கொண்டு வந்துள்ளது.

அதாவது 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைதளங்களை பார்க்க தடை விதிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதுகுறித்து அந்நாட்டு தகவல் தொடர்புத்துறை அமைச்சர் கூறுகையில், சமூக வலைதளங்களை சிறுவர்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கும் சட்டம் அமலுக்கு வந்துள்ளது. இதனையடுத்து அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான கட்டமைப்பை உருவாக்க தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஓராண்டு கால அவகாசம் வழங்கப்படும். ஆனால், இந்த கட்டமைப்பிற்கும் சமூக ஊடகப் பயன்பாட்டாளர்கள் அனைவரின் தனிப்பட்ட தகவல்களையும் சேகரிக்க நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்படாது என்று கூறியுள்ளார்.

பார்லி., குளிர்கால கூட்டத்தொடர்:

# முதல்வர் ஸ்டாலின் தலைமையில் இன்று தி.மு.க எம்.பி.க்கள் கூட்டம்

**சென்னை, நவ. 22-**

வரும் 25-ம் தேதி பாராளுமான்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில் அதுகுறித்து ஆலோசிக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம் நடைபெறுகிறது.

தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று (வெள்ளிக்கிழமை) தி.மு.க எம்.பி.க்கள் கூட்டம் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கழக மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 22-11-2024 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும். அப்போது கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். நவம்பர் 25-ம் தேதி தொடங்க உள்ள பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் குறித்து ஆலோசனை மேற்கொள்வதற்காக இக் கூட்டம் கூட்டப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி சட்டசபை தேர்தல்:

# ஆம் ஆத்மி வேட்பாளர்கள் 11 பேரின் பெயர் அறிவிப்பு

**புது டெல்லி, நவ.22-**

டெல்லி சட்டப்பேரவை தேர்தலையொட்டி ஆம் ஆத்மி கட்சி 11 வேட்பாளர்கள் கொண்ட முதல் பட்டியலை வெளியிட்டுள்ளது. மொத்தம் 70 உறுப்பினர்களை கொண்ட டெல்லி சட்டப்பேரவையின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் முடிவடைகிறது. இதையொட்டி தேர்தல் அறிவிப்பு ஜனவரியில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஆளும் ஆம் ஆத்மி கட்சி 11 வேட்பாளர்களை கொண்ட முதல் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி ஆம் ஆத்மியில் இணைந்த 6 பேரின் பெயர்களும் உள்ளன.

பிரம்ம சிங் தன்வார் (சத்தார்பூர்), அனில் ஜா (கிராரி), பி.பி. தியாகி (லட்சுமி நகர்), ஜுபேர் சவுத்ரி (சீலாம்பூர்) ஆகிய மூவரும் சமீபத்தில் பா.ஜ.க.வை விட்டு விலகி ஆம் ஆத்மியில் இணைந்தவர்கள். வீரசிங் திங்கன் (சீலாம்புரி), சோமேஷ் ஷோகீன் (மட்டியாலா) ஆகியோர் காங்கிரசை விட்டு விலகி ஆம் ஆத்மியில் இணைந்தவர்கள். ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கெஜ்ரிவால் தலைமையில் நடந்த அரசியல் விவகாரக் குழு கூட்டத்துக்கு பிறகு இந்தப் பட்டியல் வெளியாகி உள்ளது.

# வீட்டில் வைத்து பிரசவம் பார்த்தால் நடவடிக்கை

## தமிழக சுகாதாரத்துறை எச்சரிக்கை

**சென்னை, நவ. 22-**

பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடக்க விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று அலுவலர்களுக்கு தமிழக சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ள நிலையில், வீட்டில் வைத்து பிரசவம் பார்த்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னை குன்றத்தூர் அருகே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல், வாட்ஸ் ஆப் குழுவில் வந்த குறிப்பை பயன்படுத்தி கணவனே மனைவிக்கு பிரசவம் பார்த்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த மனோகரன் (வயது 36) தனது மனைவி சுகன்யாவிற்கு (வயது 32) 3-வது முறையாக கடந்த நவ.17-ம் தேதி திடீரென பிரசவ வலி ஏற்பட்டதாகவும், பின்னர் வீட்டிலேயே ஆண் குழந்தை பிறந்ததாகவும் கூறப்படுகிறது.

முன்னதாக, மனைவிக்கு பிரசவ வலி வந்த போது, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல் வீட்டில் வைத்து மனோகரனே பிரசவம் பார்த்ததாகவும், இதுகுறித்த தகவலை அவர் வைத்திருந்த வாட்ஸ்ஆப் குழு ஒன்றில் பகிர்ந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த வாட்ஸ் அப் குழுவிற்கு "வீட்டில் குழந்தை பெற்றவர்களின் அனுபவம்" என்று அதற்கு பெயரிடப்பட்டுள்ளது. அதில் மொத்தம் 1024 பேர் உறுப்பினர்களாக உள்ளதாக கூறப்படுகிறது. தற்போது தாயும் சேயும் நலமாக உள்ளதாக டாக்டர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இது போன்ற விபரீத செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம் என்று மருத்துவத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் வீட்டில் வைத்து பிரசவம் பார்த்தாலோ அல்லது வாட்ஸ்-அப்பில் வரும் தகவல்களை வைத்து பிரசவம் பார்த்தாலோ சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக சுகாதாரத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் கர்ப்பிணி பெண்கள் முறையாக மருத்துவ பரிசோதனைக்கு வருகிறார்களா? என்பதை தீவிரமாக கண்காணிக்க கிராம சுகாதார அலுவலர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

கர்ப்பிணி பெண்கள் பிரசவம் தரித்த மூன்று மாதத்தில் இருந்து மருத்துவக் கண்காணிப்பில் இருக்க வேண்டும், அவர்களுக்கான தடுப்பூசிகள் இரும்புச் சத்து மாத்திரைகள், ஸ்கேன் போன்றவை முறையாக கிடைக்கிறதா? என்று கிராமப்புற செவிலியர்கள் அதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், பிரசவக்காரர் இருக்கும் நேரத்தில் அவர்களை தீவிரமாக கண்காணிக்க வேண்டும். வீட்டில் வைத்து பிரசவம் பார்ப்பவர் தாய்க்கும் சேய்-யின் உயிருக்கும் எந்த அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பிரசவத்திற்கு பிறகு அதிக ரத்தப் போக்கினால் உயிரிழக்கும் அபாயம் உள்ளது.

மேலும் குழந்தையின் உயிருக்கும் ஆபத்து உள்ளது. அதனால் அனைத்து பிரசவங்களும் மருத்துவமனைகளில் நடக்க விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா குற்றச்சாட்டு எதிரொலி:

# அதானியை கைது செய்ய ராகுல்காந்தி வலியுறுத்தல்

**புது டெல்லி,நவ. 22-**

தொழிலதிபர் கவுதம் அதானி, தங்கள் நாட்டு முதலீட்டாளர்களை ஏமாற்றியதாகவும், அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ள நிலையில் அவரை உடனே கைது செய்ய வேண்டும் என்று ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி நேற்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

அதானி மீது லஞ்ச புகார்கள் உள்ள போதும் பிரதமர் மோடியின் பாதுகாப்பில் அவர் சுதந்திரமாக வலம் வருகிறார். இந்த புகாரில் பிரதமர் மோடிக்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அதானி முறைகேடு தொடர்பாக விரிவான விசாரணை நடத்த நாடாளுமன்ற கூட்டுக்குழுவை உடனே அமைக்க வேண்டும். தொழிலதிபர் அதானி உடனடியாக கைது செய்யப்பட வேண்டும்.

மேலும் அவரை பாதுகாத்து வரும் செபி தலைவர் மதாபி புச் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். பிரதமர் மோடி இருக்கும் வரை, அதானி இந்தியாவில் பாதுகாப்பாக இருப்பார். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், அதானி முறைகேடு விவகாரம் தொடர்பாக மக்களவையில் விவாதிக்க குரல் எழுப்பப்படும். இவ்வாறு ராகுல் காந்தி கூறினார்.

# ஆடுஜீவிதம் படத்திற்காக ஏ.ஆர்.ரகுமானுக்கு விருது

**ன்னை, நவ. 22-**

சிறந்த பின்னணி இசைக்கான வெளிநாட்டு படப்பிரிவில் ஹாலிவுட் இசை மீடியா விருதை ஆடுஜீவிதம் படத்திற்காக இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் வென்றுள்ளார்.

இயக்குநர் பிளெஸ்சி இயக்கத்தில் பிருத்விராஜ் , அமலா பால் நடிப்பில் கடந்த மார்ச் 28-ம் தேதி வெளிவந்த படம் ஆடு ஜீவிதம். இப்படம் மிகப் பெரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியாகி ரூ. 100 கோடிக்கும் அதிகமாக வசூலித்தது.

ஏ.ஆர். ரகுமான் இசையில் வெளியான இப்படத்தின் பாடல்களும் பின்னணி இசையும் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. இந்நிலையில், சிறந்த பின்னணி இசைக்கான வெளிநாட்டு படப்பிரிவில் ஹாலிவுட் இசை மீடியா விருதை ஆடுஜீவிதம் படத்திற்காக இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் வென்றுள்ளார்.

# ஜனாதிபதி திரவுபதி முர்மு இன்று ஐதராபாத் வருகை

**புது டெல்லி, நவ. 22-**

ஜனாதிபதி திரவுபதி முர்மு இன்று காலை டெல்லியில் இருந்து விமான மூலம் ஐதராபாத் வருகிறார்.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் கலாச்சார பிரிவு சார்பில் பிரஜ்னா பிரவாக் என்ற பெயரில் 4 நாட்கள் மாநாடு நடைபெறுகிறது. ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் தலைமையில் நடைபெறும் மாநாட்டை திரவுபதி முர்மு தொடங்கி வைத்து பேசுகிறார். ஜனாதிபதி வருகையை முன்னிட்டு ஐதராபாத்தில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# அடிப்படை ஆதாரமற்றவை: அமெரிக்க குற்றச்சாட்டுக்கு அதானி குழுமம் விளக்கம்

**புதுடெல்லி, நவ. 22-**

அமெரிக்காவின் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றது என்று அதானி குழுமம் விளக்க அளித்துள்ளது.

சூரிய மின் சக்தி திட்டத்தில் முதலீட்டாளர்களை ஏமாற்றியதாகவும், இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாகவும் கவுதம் அதானி மீது அமெரிக்காவில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கவுதம் அதானி, அவரது உறவினர் சாகர் அதானி உள்ளிட்ட 7 பேர் சுமார் 265 மில்லியன் டாலர்களை லஞ்சமாக இந்திய அதிகாரிகளுக்கு வழங்க ஒப்புக்கொண்டதாக அந்த ஆணையம் முன்வைத்த குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டை அடுத்து அதானிக்கு எதிராக கோர்ட்டு பிடிவாரண்ட் பிறப்பித்தது. அதானி நிறுவனம் மீது குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து, அவரது நிறுவன பங்குகள் கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளன.

இந்திய அரசியலிலும் அதானி மீதான குற்றச்சாட்டு பெரும் புயலை கிளப்பியுள்ளது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அதானியை உடனடியாக கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இந்த நிலையில், தங்கள் நிறுவனத்திற்கு எதிராக அமெரிக்காவில் வைக்கப்பட்டு இருக்கும் குற்றச்சாட்டுகளை அதானி நிறுவனம் மறுத்துள்ளது. இது தொடர்பாக அதானி நிறுவனம் கூறியிருப்பதாவது., அமெரிக்காவின் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றது. அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களை சட்ட ரீதியாக எதிர்கொள்வோம். எங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா நிரூபிக்கும் வரை நாங்கள் நிரபராதிதான்'' என்று தெரிவித்துள்ளது.

# வன்மம் கக்குவோரை நாம் கடந்து செல்ல தொண்டர்களுக்கு திருமாவளவன் அறிவுரை

**சென்னை, நவ. 22-**

காழ்ப்புணர்வால் வன்மம் கக்குவோரை கடந்து செல்ல வேண்டும் என வி.சி.க. தொண்டர்களுக்கு அக்கட்சித் தலைவர் திருமாவளவன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

களமிறங்கிச் செயல்படுவோர் யாவராயினும் அவர்கள் விமர்சனங்களுக்கு ஆளாவது தவிர்க்க இயலாதது. அவை நேர்மையான, ஆக்கபூர்வமான விமர்சனங்களாக இருந்தால், அவற்றிலிருந்து நம்மை நாமே சுய விமர்சனங்களுக்கு உட்படுத்திக் கொள்வதை நடைமுறையாகக் கொண்டிருக்கிறோம். அவற்றுக்கேற்ப தேவையான மாற்றங்களையும் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால், நம்மைப் பற்றிய விமர்சனங்கள் எத்தகையவையாக உள்ளன? அவை, பெரும்பாலும் திட்டமிட்ட பொய்யுரைகளாகவும் ஆதாரமற்ற அவதூறுகளாகவுமே அள்ளி இறைக்கப்படுகின்றன. அவை, மிகவும் கேடான உள்நோக்கம் கொண்டவை.

வாய்க்கு வந்தபடி வன்மத்தைக் கக்குவது விமர்சனமல்ல. அவதூறாகும். நம்மை விமர்சிப்பவர்களில் இருவகை உண்டு. நம் மீது நம்பிக்கையும், நமது வளர்ச்சியில் அக்கறையும் கொண்டவர்கள் ஒருவகை. நம்மை ஏற்க மனமில்லாத, நம் வளர்ச்சியை முற்றிலும் விரும்பாத, நம்மை வீழ்த்தி மகிழ்ந்தாட காத்திருக்கும் சதிகாரர்கள் இன்னொரு வகை. எவர் நம்மை விமர்சிப்பவர்கள் என்பதையறிந்தே நம் எதிர்வினைகள் அமையவேண்டும். கொள்கை அடிப்படையில் நம் எதிரிகள் என்னும் நிலையில், அவர்களின் விமர்சனங்களுக்கு எதிர்வினையாற்றும் பொறுப்பு நமக்கு உண்டு. அது தவிர்க்க முடியாதது.

ஆனால், எதிலும் உறுதியில்லா உதிரிகளா நமது எதிரிகள்? ஆதாரம் ஏதுமின்றி இவர்கள் பரப்பும் அவதூறுகளா நம்மை அசைக்கும் ஆயுதங்கள்? காழ்ப்புணர்வால் வன்மம் கக்குவோரைக் கண்டும் காணாமல் கடந்து செல்வோம். காலமெல்லாம் மக்களுக்காகக் கடமையாற்றுவதில் கவனம் குவிப்போம். இவ்வாறு அந்த பதிவில் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

# விபத்தில் 5 பேர் பலி

**அலிகார், நவ. 22-**

உத்தரபிரதேசம், அலிகார் அருகே உள்ள யமுனா எக்ஸ்பிரஸ் சாலையில் டெல்லியில் இருந்து அஸாம்கரை நோக்கி, பயணிகளை ஏற்றிக் கொண்டு டபுள் டெக்கர் பஸ் சென்று கொண்டிருந்தது. அதிவேகமாக சென்ற பஸ், டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து, லாரியின் பின்புறத்தில் பயங்கரமாக மோதியது.

இதில், 5 மாத குழந்தை உள்பட 5 பேர் உயிரிழந்தனர். 15-க்கும் மேற்பட்ட பயணிகள் பஸ்ஸின் இடிபாடுகளில் சிக்கினர். இதனை அறிந்த உள்ளூர் மக்கள், பஸ்ஸின் கண்ணாடிகளை உடைத்து விபத்தில் சிக்கியவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# தனுஷ் - ஐஸ்வர்யா விவாகரத்து வழக்கில் வரும் 27-ம் தேதி தீர்ப்பு

**சென்னை, நவ. 22-**



நடிகர் தனுஷ் - ஐஸ்வர்யா ரஜினிகாந்த் விவாகரத்து கோரிய வழக்கில் வரும் 27-ம் தேதி தீர்ப்பு அளிக்கப்படும் என்று சென்னை குடும்ப நல நீதிமன்ற நீதிபதி தெரிவித்தார்.

நடிகர் ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யாவுக்கும், இயக்குனர் கஸ்தூரி ராஜாவின் மகன் நடிகர் தனுசுக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் கடந்த 2004-ம் ஆண்டு நவம்பர் 18-ம் தேதி சென்னையில் திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர்.

கருத்து வேறுபாடு காரணமாக கடந்த சில ஆண்டுகளாக இவர்கள் தனித்தனியாக வாழ்ந்து வருகின்றனர். தனுஷ் - ஐஸ்வர்யா இடையேயான பிரச்சினையை தீர்க்க அவர்களுடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் இருவரும் விவாகரத்து பெறுவதில் உறுதியாக இருந்தனர்.

இந்த நிலையில் இருவரும் பரஸ்பர விவாகரத்து கோரி சென்னை குடும்ப நல கோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர். அதில், 2004-ம் ஆண்டு நடைபெற்ற தங்களின் திருமணத்தை செல்லாது என அறிவிக்க வேண்டும் என கூறியிருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த குடும்பநல கோர்ட்டு, தனுஷ் -ஐஸ்வர்யாவை நேரில் ஆஜராக உத்தரவிட்டது.

இதையடுத்து அந்த மனு நீதிபதி சுபாதேவி முன்னிலையில் கடந்த 2-ம் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது நடிகர் தனுஷ், ஐஸ்வர்யா ஆகியோர் ஆஜராகவில்லை. இதைத் தொடர்ந்து, வழக்கின் விசாரணையை 21-ம் தேதிக்கு (நேற்று) தள்ளிவைத்த நீதிபதி, அன்றைய தினம் இருவரும் ஆஜராக உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், விவகாரத்து வழக்கு தொடர்பான விசாரணைக்காக ஐஸ்வர்யா ரஜினிகாந்த் நேற்று சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் நீதிபதி முன்பு ஆஜரானார். அப்போது தனுஷ் வந்து கொண்டிருப்பதாக அவரது வழக்கறிஞர் நீதிபதியிடம் தெரிவித்த நிலையில் விசாரணையை 12 மணிக்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து நடிகர் தனுஷ் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

அப்போது திருமண பந்தத்தில் இருந்து பிரிவதில் உறுதியாக இருப்பதாக நீதிமன்றத்தில் இருவரும் தெரிவித்தனர். இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி பரஸ்பரம் விவாகரத்து கோரிய வழக்கில் வரும் 27-ம் தேதி தீர்ப்பு அளிக்கப்படும் என்று உத்தரவிட்டார்.

# மகாராஷ்டிராவில் சுமார் 10 டன் வெள்ளி பறிமுதல்

**மும்பை, நவ. 22-**

மகாராஷ்டிராவில் சுமார் 10 டன் வெள்ளி பறிமுதல் செய்யப்பட்ட விவகாரத்தில் பறிமுதல் செய்யப்பட்ட வெள்ளி ஒரு வங்கிக்கு சொந்தமானது என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள 288 சட்டசபை தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் தேர்தல் நடைபெற்றது.

தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை (23-ம் தேதி) எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இந்நிலையில், தேர்தல் நடைபெற்ற நாளான நேற்று முன்தினம் மாநிலத்தின் துலே மாவட்டத்தில் உள்ள தால்னர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் போலீசார் வழக்கமான சோதனை நடத்தினர்.

அந்த சோதனையில் நாக்பூர் நோக்கி சென்ற லாரியில் இருந்து சுமார் 10 டன் (10,080 கிலோ) எடையுள்ள வெள்ளி கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டதாக நாசிக்கின் சிறப்பு காவல் கண்காணிப்பாளர் தத்தாத்ரே கராலே தெரிவித்தார். முதற்கட்ட விசாரணையில், வெள்ளி ஒரு வங்கிக்கு சொந்தமானது என்றும் சரி பார்த்த பிறகு அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த அக்.15 முதல், மகாராஷ்டிராவில் மாநில மற்றும் மத்திய அமைப்புகளின் அமலாக்க நடவடிக்கைகளில் ரூ.706.98 கோடி சொத்துக்களை பறிமுதல் செய்துள்ளன.

இதில் சட்டவிரோத பணம், மதுபானம், போதைப்பொருள் மற்றும் விலைமதிப்பற்ற உலோகங்கள் அடங்கும் என்று தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தனிப்பட்ட கொலைகள் நடப்பதற்கும் சட்டம், ஒழுங்குக்கும் சம்பந்தமில்லை

## எடப்பாடிக்கு ஆர்.எஸ்.பாரதி பதில்

**சென்னை, நவ. 22-**

தனிப்பட்ட கொலைகளுக்கும் சட்டம் ஒழுங்குக்கும் சம்பந்தமில்லை. இதனை எடப்பாடி பழனிசாமி புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஒசூர் நீதிமன்றம் சம்பவம், தஞ்சையில் ஆசிரியை கொலை இரண்டும் தனிப்பட்ட விவகாரங்களின் அடிப்படையில் நடந்தவை. தூத்துக்குடி சம்பவத்தில் நடந்த உயிரிழப்புதான் சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்று தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறியுள்ளார் .

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது:

தஞ்சாவூரில் ஆசிரியை கொலை, ஒசூரில் வழக்கறிஞர் மீது தாக்குதல் தனிப்பட்ட விரோதத்தால் நடந்தவை. தனிப்பட்ட கொலைகள் நடப்பதற்கும், சட்டம் ஒழுங்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி புரிந்து கொள்ள வேண்டும்.

தூத்துக்குடியில் 13 பேரை சுட்டுக் கொன்றது, கொடநாடு பங்களா கொலை, கொள்ளை சம்பவங்கள் தான் சட்டம் ஒழுங்கு பிரச்னை. அ.தி.மு.க., ஆட்சியில் பல ஆசிரியர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

மக்கள் மத்தியில் தவறான கருத்தை பரப்ப முட்டி போட்டு கரணங்கள் அடிக்கிறார் எடப்பாடி பழனிசாமி. தன் மீதான சி.பி.ஐ. விசாரணைக்கு சுப்ரீம் கோர்ட் வரை சென்று தடை வாங்கியவர் தான் எடப்பாடி.

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் சி.பி.ஐ., விசாரணையை வரவேற்கும் எடப்பாடி, தன் மீதான புகாரில் சி.பி.ஐ. விசாரணையை எதிர்ப்பது ஏன்? மனசாட்சியை அடகு வைத்து விட்டு எடப்பாடி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்.

தி.மு.க., ஆட்சியில் குற்றங்கள், கொலைகள் குறைந்துள்ளது. கொலைகளை நாங்கள் நியாயப்படுத்தவில்லை, ஆனால் அது பற்றி பேச எடப்பாடிக்கு தகுதியில்லை. தி.மு.க.,வின் சிறப்பான ஆட்சியை நீதிமன்றமே பாராட்டி உள்ளது.

தமிழகத்தில் 79 சதவீதம் மக்கள் முதல்வருக்கு ஆதரவாக உள்ளனர். அ.தி.மு.க., ஆட்சியில் 2020-ம் ஆண்டில் 1252 கொலைகள் நடைபெற்றுள்ளன. இந்த ஆண்டு 799 கொலைகள் மட்டுமே நடந்துள்ளது. பழனிசாமி போல் நாங்கள் கணக்கிட்டு சொன்னால் அ.தி.மு.க., ஆட்சியில் ஒரு லட்சம் கொலைகள் பதிவாகியுள்ளது. இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி கூறினார்.

# ஜார்கண்டில் பஸ் கவிழ்ந்த விபத்தில் 7 பேர் உயிரிழப்பு

**ராஞ்சி,நவ. 22-**

ஜார்கண்டில் சாலையில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஜார்கண்ட் மாநிலம் ஹசாரிபாக் மாவட்டத்திலிருந்து பஸ் ஒன்று பயணிகளுடன் பாட்னா நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது கோர்ஹர் காவல் நிலைய பகுதிக்கு அருகே சென்ற பஸ் சாலையில் திரும்பும் போது எதிர்பாராதவிதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர் மற்றும் பலர் காயமடைந்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பஸ்சில் மேலும் சிலர் சிக்கியிருப்பதால் அவர்களை மீட்கும் பணியில் போலீசார் மற்றும் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் இந்த சம்பவம் பற்றி விசாரணை நடைபெற்று வருவதாக போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவம் பற்றி ஹசாரிபாக் எஸ்பி அரவிந்த் குமார் சிங் கூறுகையில், பஸ்சில் சுமார் 50 பயணிகள் இருந்ததாகவும், விபத்தில் இதுவரை 7 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



அதானி குழுமம் மீதான அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ள நிறுவனங்கள் பட்டியலில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பெயரும் இடம் பெற்றுள்ள நிலையில், இது குறித்து தமிழக அரசு விசாரணைக்கு ஆணையிட வேண்டும். இது குறித்தும் தமிழக அரசு விளக்கமளிக்க வேண்டும்.

- ராமதாஸ்



தமிழக அரசு கல்விப்பணிக்காக கூடுதல் நிதி ஒதுக்க, தேவைக்கேற்ப பணியாளர்களை நியமிக்க ஆலோசனை செய்யலாம்.மேலும் தமிழக அரசு சட்டம் ஒழுங்கில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அரசுப்பள்ளிகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

- ஜி.கே. வாசன்



அதானி குழுமத்திற்கு எதிராக அமெரிக்காவில் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது. அதானியின் முறைகேடுகளை விசாரிக்க வெளிநாட்டு அரசு முன்வந்துள்ளது, இந்திய நிறுவனங்கள் பா.ஜ.க. அரசால் கைப்பற்றப்பட்டிருப்பதை காட்டுகிறது. அதானியின் முறைகேடு குறித்து விசாரிக்க நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும்.

- ஜெய்ராம் ரமேஷ்



பாராளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் வரும் 25-ம் தேதி தொடங்கும் போது மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஒரு நாடகத்தை தொடங்கி, பொருளாதாரத்தை குறிவைக்க முயற்சிக்கிறார். ஒரு சில ஆலோசகர்களால் தனக்கு சொல்லப்பட்டதைத் திரும்பத் திரும்ப அவர் கூறுகிறார்.

- சம்பித் பத்ரா

ஈரோடு மாவட்டம் சேஷன் நகர் பகுதியில்

# ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்



ஈரோடு,நவ.22-

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், சேஷன் நகர் பகுதியில் *(21.11.2024)* வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு துறைகளின் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்கள் நகர பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் என்பது இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாகும். முதன்முறையாக தமிழகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டு வந்துள்ளார்கள். இதன் மூலம் பலகோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு, சுமார் 1.16 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர். நம்முடைய மாவட்டத்தில் நிறைய திட்டங்களுக்கான வாய்ப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கியுள்ளார்கள். தாளவாடி மலைப்பகுதியில் மிகுந்த அக்கறை கொண்டு பல திட்டங்களை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் அந்தியூர், சத்தியமங்கலம், தாளவாடி ஆகிய வருவாய் வட்டங்களில் ஆசிரியர்கள் மற்றும் அரசு பணியாளர்களுக்கு மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தாளவாடி பகுதியில் வீட்டுவசதி வாரியம் சார்பில் ஏறத்தாழ 300 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக நலத்திட்ட உதவிகள் வழங்கி, புதிய திட்டங்களை வழங்கி வருகிறார்கள். மேலும் அப்பகுதி மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து அதனை நிறைவேற்றுவதற்கு புதிய திட்டங்களை அறிவித்து வருகிறார்கள் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேசியதாவது,

ஈரோடு மாவட்டத்தில் இன்றைய தினம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தாளவாடி வட்டம், சேஷன்நகர் பகுதியில் ரூ.47.56இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையம், தாளவாடி ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் கட்டப்பட்ட ரூ.78 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம், ரூ.54.83 இலட்சம் மதிப்பீட்டில் உக்கரம் ஆரம்ப சுகாதார நிலைய பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் புஞ்சைபுளியம்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர் குடியிருப்பு கட்டடம், ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நம்பியூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.53.74 இலட்சம் மதிப்பீட்டில் திங்களூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் பவானி மண் தொழிலாளர் துணை சுகாதார நிலைய கட்டிடம் என மொத்தம் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை அரசின் திட்டங்களால் தன்னிறைவு பெற்ற மாவட்டம் என்கின்ற வகையில், மிக சிறப்பான முறையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம், போதை மீட்பு மையம், அந்தியூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம், கோபி செட்டி பாளையம் அரசு மருத்துவமனையில் ஒருங்கிணைந்த ஆய்வகக் கட்டிடம், சத்தியமங்கலம் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், சித்தோடு வட்டார பொது சுகாதார அலகு, கருங்கல்பாளையம், ராஜாஜிபுரம் மற்றும் சூரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் கட்டிடம், திண்டல் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம், டி.என்.பாளையம் கள்ளிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம், அத்தாணியில் வட்டார பொது சுகாதார அலகு, கருமாண்டி செல்லிபாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம், பி.கொரவம்பாளையம், ஆவுடையார்பாறை, நேதாஜிசாலை எம்.ஜி.பாளையம், ராஜாஜிபுரம் வீரப்பன் சத்திரம், சூரம்பட்டி அணைக்கட்டு, ராயபாளையம் புதூர், காந்திஜி சாலை, ராஜாகாடு திண்டல் ரங்கம்பாளையம், கருமாண்டி செல்லிபாளையம் கந்தம்பாளையம், பர்கூர், கும்டாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் துணை சுகாதார நிலையங்கள் என மொத்தம் ரூ.61.32 கோடி செலவில் 34 மருத்துவ கட்டிடங்கள் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 18 நகர்புற நலவாழ்வு மையங்கள், 3 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள், 16 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியர் குடியிருப்பு, சித்த மருத்துவ பிரிவு, மருத்துவர் குடியிருப்பு, செவிலியர் குடியிருப்பு, துணை செவிலியர் பயிற்சி மையம், டிஜிட்டர் எக்ஸ்ரே கருவி, வட்டார பொது சுகாதார அலகு கட்டிடங்கள், சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில், சித்தா மருத்துவ பிரிவு, ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 8 தளங்கள் கொண்ட பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவ கட்டிடம், தாய்பால் வங்கி, கோபிசெட்டிப்பாளையம் அரசு மருத்துவமனையில் சீமாங் கட்டிடம், சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில் பேவர் பிளாக் சாலை திறப்பு, ஜெனரேட்டர், ஊவு ளுஉயn, பவானி அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், சீமாங் கட்டிடம், ஒருங்கிணைந்த சேவை மையக் கட்டிடம், ரோட்டரி கட்டிடம் மற்றும் ஒளிரும் கட்டிடம் என இதுவரை ரூ.118.49 கோடி செலவில் பல்வேறு மருத்துவ கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் 375 துணை சுகாதார நிலையங்கள், 76 ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருந்தகம் , 1 மாவட்ட தலைமை மருத்துவமனை, 2 வட்டம் சாரா மருத்துவமனை, 5 வட்டார மருத்துவமனை, 1 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. தமிழக முதலமைச்சர் அறிவிப்பின்படி 708 நகர்ப்புற நலவாழ்வு மையம் அமைக்கும் வகையில், ஈரோடு மாநகராட்சியில் 21, கோபிசெட்டிபாளையம் நகராட்சி 1 என 22 நலவாழ்வு மையங்களில், தமிழ்நாடு முதலமைச்சர் ஈரோடு மாநகராட்சியில் - 17, கோபிசெட்டி பாளையம் நகராட்சி - 1 ஆகிய 18 இடங்களில் திறந்து வைத்துள்ளார்கள். மேலும், ஈரோடு மாநகராட்சி பகுதியில் 4 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2024-25-ல் ரூ.19.80 கோடி மதிப்பீட்டில் 16 அறிவிப்புகளின் மூலம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு பல்வேறு மருத்துவ கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், ரூ.8.5 கோடி மதிப்பில் ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், எம்.ஆர்.ஐ.ஸ்கேன் கருவி, ரூ.87 இலட்சம் மதிப்பில் மகப்பேறு சிறப்பு மையம் மற்றும் மொடக்குறிச்சி சமுதாய சுகாதார நிலையத்தில் ஊவுபு. மல்டிபாராமானிட்டர் மற்றும் கோபி செட்டிபாளையம் அரசு மருத்துவமனை, மொடக்குறிச்சி சமுதாய சுகாதார நிலையத்தில் இதர கருவிகள் வழங்கப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது 545 வழங்கப்பட்டுள்ளது. இதில் ஈரோடு மாவட்டத்தில் 29 விருது வழங்கப்பட்டுள்ளது. மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ் தமிழகம் முழுவதும் இதுவரை 84 வழங்கப்பட்டுள்ளது. இதில் ஈரோடு மாவட்டத்தில் கோபி மற்றும் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள்" முகாமானது ஈரோடு மாவட்டத்தில்" 22.11.2023 அன்று காளிங்கராயன்பாளையம், துணை சுகாதார நிலையத்தில் தொடங்கி வைக்கப்பட்டதில் 10,24,998 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, 123 நபர்கள் தொற்று உள்ளவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு புற்றுநோய் சிகிச்சைக்கான தேவையான கோபால்ட் கருவி 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பழங்குடியினர் மக்களுக்காக தாமரைக்கரை, துணை சுகாதார நிலையத்தில் மலை வாழ் மக்கள் நலன்களுக்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்தியூர் சுற்று வட்டார மலை கிராமங்களில் வசிக்கும் மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய 108 அவசர ஊர்தி, பர்கூர் மலைவாழ் மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் புதிய நடமாடும் மருத்துவக் குழு வாகனம், அந்தியூர் அரசு தலைமை மருத்துவமனை பிரசவித்த மலைவாழ் தாய்மார்களை வீடுவரை கொண்டு சென்று விட புதிய இலவச தாய்சேய் நல ஊர்தி 108 வாகனம் வழங்கப்பட்டுள்ளது. ஹீமோகுளோபினோபதி தடுப்பு திட்டத்தில் பொதுவான இரத்தம் சார்ந்த நோய்களான தலாசீமியா, சிக்கிள் செல் இரத்த சோகை நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுப்பு மற்றும் சிகிச்சை மேற்கொள்ளும் வகையில், 1.21 இலட்சம் மாணவர்களுக்கு ஹீமோகுளோபினோபதிக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அதில் 9 சதவிகித நபர்களுக்கு நோய் கடத்தும் தன்மையுடையவர் (உயசசநைச) என கண்டறியப்பட்டது. இத்திட்டம் பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் 30 பழங்குடியின வட்டாரங்களிலுள்ள 78,949 கருவுற்ற தாய்மார்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு, இந்திய அளவிலேயே முன்னோடி திட்டமாக திகழ்கின்றது.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் முதல் சேவை 18,22,062 நபர்களுக்கும், தொடர் சேவை 7,35,743 நபர்களுக்கும் 100 சதவீதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் 6 அரசு மருத்துவமனை, 10 தனியார் மருத்துவமனைகளில் 6750 நபர்களுக்கு ரூ.7,34,75,701/-மதிப்பில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் 171 முகாம்கள் நடத்தப்பட்டு 157455 மக்கள் பயன்பெற்றுள்ளனர். தமிழகம் முழுவதும் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு இதயம் காப்போம் தொடங்கி வைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இதில் இருதய பாதுகாப்பு மருந்துகளான ஆஸ்பிரின், க்ளோபிடோக்ரல், அட்ரோவாஸ்டாட்டின் மாத்திரைகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 536, துணை சுகாதார நிலையங்களில் 22 என 558 வாங்கி பயன்பெற்றுள்ளனர்.

ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள துணை சுகாதார நலவாழ்வு மையங்களில் (HWC-HSCs), இடைநிலை சுகாதார பணியாளர்கள் (MLHP) மூலம்"சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள்" முகாமானது, ஈரோடு மாவட்டத்தில் காளிங்கராயன்பாளையம், துணை சுகாதார நிலையம், தொடங்கி வைக்கப்பட்டது. இதில் 4,67,143 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2,208 மலைக்கிராமங்களில், சுமார் 10 இலட்சம் மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். பழங்குடி மக்களிடையே காணப்படும் ஹீமோகுளோபினோபதி, தாலசீமியா, சிக்கில் செல் அனிமீயா போன்ற மரபணு நோய் கண்டறிவது குறித்து மரபணு ஆலோசனை வழங்கும் திட்டம் ஈரோடு மாவட்டம் தாளவாடி மற்றும் சத்தியமங்கலத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் திண்டுக்கல் மாவட்டம்- ஒட்டன்சத்திரம், கொடைக்கானல் மற்றும் பழனி, ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி, கன்னியாகுமரி மாவட்டம் – திருவட்டார், மேல்புறம் மற்றும் தோவாளை, திருச்சி மாவட்டம் – துறையூர் மற்றும் உப்பிலியாபுரம், திருப்பத்தூர் மாவட்டம் – மாதனூர் மற்றும் நரியம்பட்டு ஆகிய 12 வட்டாரங்களில் மரபணு ஆலோசனை மற்றும் நோய் உள்ளவர்களுக்கு சிகிச்சைகளும் வழங்கப்படுகிறது. மேலும் பழங்குடியினருக்கு 100% கொரோனா தடுப்பூசி செலுத்திய இந்தியாவின் முதல் மாவட்டம் தமிழ்நாட்டின் நீலகிரி ஆகும்.மேலும் தாளவாடி மக்கள் பிரேத பரிசோதனைக்கு சத்தியமங்கலம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதாகவும், இப்பகுதிக்கு என பிரேத பரிசோதனை கூடம் அமைத்துத்தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று ரூ.78.00 இலட்சம் மதிப்பில் பிரேத பரிசோதனை கூடம் கட்டப்பட்டுள்ளது. இந்த அரசு மக்களுக்கான அரசு. மக்களின் கோரிக்கைகளை ஏற்று உடனடியாக நிறைவேற்றக்கூடிய அரசு. தமிழ்நாடு முதலமைச்சர் எல்லாருக்கும் எல்லாம் என்கின்ற சிறப்பான ஆட்சியை நடத்தி வருகின்றார் என தெரிவித்தார்.

தொடர்ந்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆகியோர் 10 பயனாளிகளுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து பெட்டகத்தினையும், 5 கர்ப்பிணி தாய்மார்களுக்கு உட்டச்சத்து பெட்டகத்தினையும், காசநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த 2 நபர்களுக்கு ஊட்டச்சத்து தொகுப்பினையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ரெ.சதீஸ் இஆப., கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.அம்பிகா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.பு.அருணா உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள், மருத்துவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கேர்பெட்டா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவின் தரம்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் ஆய்வு



ஊட்டி, நவ.22-

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டத்தில், 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' திட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று *(21.11.2024)* மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, கேர்பெட்டா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் சமையல் கூடத்தினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, அப்பள்ளியில் சுற்றுசுவர் சேதமடைந்ததை யோட்டி நெடுஞ்சாலைத்துறையின் மூலம் தற்காலிகமாக மணல் முட்டைகளை அடுக்கி வைத்து, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறித்தினார்.

அதனைத்தொடர்ந்து, அரவேணு அரசு பழங்குடியினர் உறைவிட நடுநிலைப்பள்ளியில் மாணவர்கள் தங்கும் விடுதியின் அடிப்படை வசதிகளை நேரில் பார்வையிட்டு, விடுதியில் வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் உணவுப் பொருட்களின் இருப்பு ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டு, மழைகாலங்களில் பள்ளி அருகில் கழிவுநீர் தேங்காத வகையில் கல்வெட்டு அமைக்க திட்ட மதிப்பீடு தயார் செய்யுமாறும், மாணவர்கள் விடுதியின் மேல்பகுதியில் மழைநீர் தேங்கமால் இருக்க மேற்கூரை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் துறை பொறியாளர்களுக்கு அறிவுறித்தினார்.

பின்னர் குஞ்சப்பணை ஊராட்சி, சேட்டுப்பேட்டை பகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள் நோயாளிகள், மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும், மருந்துகளின் இருப்புகள் குறித்தும், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கேட்டறிந்து, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து பரிந்துரை செய்யப்படும் நபர்களின் முழு விவரங்களை பதிவேட்டில் தவறாமல் குறிப்பிடுவதோடு, அவர்களை தொலைபேசியின் வாயிலாக தொடர்பு கொண்டு உறுதி செய்ய வேண்டு என மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கலெக்டர் அறிவுறித்தினார்.

இந்நிகழ்வின் போது, குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் (பொ) சக்திவேல், வட்டாட்சியர்கள் கோமதி (கோத்தகிரி), ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை ராஜசேகர் (கோத்தகிரி), கோத்தகிரி பேரூராட்சி செயல் அலுவலர் நட்ராஜ் (பொ), கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுப்ரமணி, விஜயா, உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) சாந்தசீலன், உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# திண்டல்மலை நகர கூட்டுறவு சங்கத்தில் 2,171 பயனாளிகளுக்கு ரூ.25.5 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகள்

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்



ஈரோடு,நவ.22-

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைமையகம், மங்களம் பதனிடும் அலகு மற்றும் ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் ஆய்வு மேற்கொண்டு, திண்டல்மலை நகர கூட்டுறவு சங்கத்தில் 2,171 பயனாளிகளுக்கு ரூ.25.05 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை வழங்கினார்

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை அமைச்சர்; செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து இன்றைய தினம் *(21.11.2024)* ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை எண்ணெய் விவசாயிகள் அதிகபடியாக இருக்கின்ற காரணத்தால், இங்கு விளையக்கூடிய தேங்காய்களாகவும், கொப்பரைகளாக மாற்றியும் தங்குடைய வாழ்வாதாதற்கு பயன்படுத்தி வருகின்றனர். இந்த விவசாய பெருங்குடி மக்கள் வரவு செலவு செய்கின்ற தொடக்க வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கமானது நல்லமுறையில் செயல்பட்டு, விவசாயிகள் பாராட்டுகின்ற வகையில் இயங்கி வருகின்றது. கூட்டுறவு கடன் சங்கங்கள் நகர்ப்புற கூட்டுறவு சங்கங்களாக தரம் உயர்த்தப்பட்டு, கிராம கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் திட்டங்கள் தொடர்ந்து வழங்கப்படும். ஈரோடு மாவட்ட கூட்டுறவு துறையின் செயல்பாடுகள் பாராட்டத்தக்க வகையில் உள்ளது. மேலும், விவசாயிகள், சாலையோர வியாபாரிகள், மகளிர் சுயஉதவிக் குழு ஆகியற்றினை முன்னேற்றுவதே கூட்டுறவு சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுரையின்படி, விவசாயிகளுக்கான பயிர் கடன் ரூ.12 ஆயிரம் கோடியை கடந்து தற்போது ரூ.16,500 கோடி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கூட்டுறவு வங்கி மூலம் பண பரிவர்த்தனை இந்தாண்டு ஒரு லட்சம் கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கியில் ஏடிஎம் கார்டுகள் வழங்கும் பணி 60 விழுக்காடு நிறைவடைந்துள்ளது. மேலும், கிராம அளவில் மொபைல் ஏ.டி.எம் அமைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு வங்கிகளை உயர்த்த புதுமையான திட்டங்கள் மூலம் புதுமைப்படுத்த அனைவரும் முனைப்போடு செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை அமைச்சர்; மகளிர் சுயஉதவிக்குழு கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன், டாம்கோ கடன், சம்பளக் கடன், மாத வருமானம் பெறும் மகளிர் கடன், சிறுவணிகக் கடன், வீட்டுவசதி கடன், வீடு அடமானக்கடன், பண்ணைசாராக் கடன், மத்தியக்கால கடன், கே.சி.சி. பயிர்கடன், கே.சி.சி. நடைமுறை மூலதனக் கடன், கே.சி.சி. கூட்டுபொறுப்பு குழு பயிர் கடன், கே.சி.சி. விவசாய நகைக்கடன், சரக்கீட்டுக்கடன், வாகனக் கடன் என மொத்தம் 2,171 பயனாளிகளுக்கு ரூ.25,05,97,700- மதிப்பீட்டில் கடனுதவிகளை வழங்கினார்.

முன்னதாக, பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், கொப்பரை ஏல பணிகள், பதனிடும் அலகுகள், எண்ணெய் அரவை ஆலையில் தயாரிக்கப்படும் எண்ணெய் வகைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, விவசாயிகளுடன் கலந்துரையாடி, விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். தொடர்ந்து, ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைமையகம், மங்களம் பதனிடும் அலகின் செயல்பாடுகள், அங்கு தயாரிக்கப்படும் மஞ்சள், ராகி மாவு, மசாலா பொருட்கள் தயாரிப்பு, மற்றும் பேக்கிங் ஆகியவற்றினை பார்வையிட்டார். மேலும், ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி மற்றும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தட் டாம் பா ளை யம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆகியவற்றில் 4 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் விவசாயம் இயந்திரமாக்கலின் துணைப்பணி திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட ரூ.8.00 இலட்சம் மானியத்தில் ரூ.15.99 இலட்சம் மதிப்பீட்டில் டிராக்டர், சுழற்கழப்பை, ஏர் கலப்பை உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை காஞ்சிக்கோயில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பயன்பாட்டிற்கு வழங்கும் பொருட்டு, அதன் சாவியினை வழங்கினார்.

இந்த ஆய்களின் போது, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை டாக்டர் என்.சுப்பையன் இ.ஆ.ப., ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம், துணை மேயர் வே.செல்வராஜ், பெருந்துறை பேரூராட்சி தலைவர் ராஜேந்திரன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் க.ராஜ்குமார் (ஈரோடு மண்டலம்), கூடுதல் பதிவாளர் சீனிவாசன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர் மேலாண்மை இயக்குநர் மரு.சு.செந்தமிழ் செல்வி, மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை இணைப்பதிவாளர்மேலாண்மை இயக்குநர் த.செல்வக்குமரன்;, துணைப் பதிவாளர்; ஜி.காலிதா பானு, கூட்டுறவு சார்பதிவாளர் செயல் ஆட்சியர்; மு.பாலாஜி உட்பட கூட்டுறவு சங்கங்கள், துறை சார்ந்த அலுவலர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# ஈரோடு தாளவாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம்

## அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது





ஈரோடு.நவ.22-

ஈரோடு மாவட்டம், தாளவாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வு கூட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் தாளவாடி வட்டாரத்தில் அனைத்து துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து, தொடர்புடைய துறை உயர் அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை தாளவாடி பாரதிபுரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 500மெ.டன் குளிர்பாதன கிடங்கு, 1000 மெ.டன் தேசிய மின்னணு பரிவர்த்தனை கிடங்கு மற்றும் விவசாயிகளின் விளைபொருளான தேங்காய் பருப்பு ஏலமிடப்பட்டு வந்ததை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், தாளவாடி பகுதியில் அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு அரசின் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் 300 வாடகை குடியிருப்புகள் கட்டுவதற்கான இடம் தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளில் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ரெ.சதீஸ் இஆப., கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம், சத்தியமங்கலம் நகர்மன்ற தலைவர் ஜானகி, வேளாண்மை துணை இயக்குநர்செயலாளர் இரா.சா வித் தி ரி, வேளாண்மை அலுவலர் செ.கனிமொழி மற்றும் மேற்பார்வையாளர் சி.ரங்கநாதன் உட்பட அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்

# ஈரோட்டில் மாநில அளவிலான குங்பு கராத்தே ஓப்பன் சாம்பியன்ஷிப் போட்டி



ஈரோடு நவ.22-

புத்தாஸ் வூசு குங்பு கராத்தே சிலம்பம் டிரஸ்ட் சார்பில் மாநில அளவிலான12ஆம் ஆண்டு குங்பு கராத்தே ஓப்பன் சாம்பியன்ஷிப் போட்டிகள் ஈரோடு கொங்கு மஹாலில் நடைபெற்றது

இதில் மாநிலம் முழுவதிலும் இருந்து சுமார் 600க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பங்கேற்றனர்

போட்டிகளை கிங் ரீபைனரிஸ் கோமதி பூபதி அக்னிஸ்டீல் தீபா சக்தி கணேஷ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து தொடங்கி வைத்தனர்

பல்வேறு போட்டிகளில் மாணவ மாணவிகள் தங்கள் திறமைகளை வெளிப் ப டுத் தி னர் தொடர்ந்து மாலை பரிசளி விழா நடைபெற்றது

விழாவில் பெருந்துறை கொங்கு பள்ளியின் தாளாளரும் ஈரோடு மாவட்ட வூசு அசோசியேசன் தலைவர்மான டி என் சென்னியப்பன் புத்தாஸ் டிரஸ்ட் தலைவர் பூபதி ஈரோடு மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் சண்முகம் எஸ் வி என் பள்ளி தாளாளர் சம்பத்குமார் குமாரபாளையம் ஜே கே கே என் கல்வி நிறுவனங்களின் சி ஓ ஓ ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்கள். ஏற்பாடுகளை புத்தாஸ் டிரஸ்ட் செயலாளர் மற்றும் நிறுவனர் ஆர் கந்தவேல் செய்திருந்தார்

### ஊட்டி தாவரவியல் பூங்காவில்

# புல்களைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள கடிகாரம்: சுற்றுலா பயணிகள் கண்டு பரவசம்

ஊட்டி, நவ.22-

ஊட்டி தாவரவியல் பூங்காவில் புல்களைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள கடிகாரம் வடிவம் சுற்றுலாப் பயணிகள் கண்டு பரவசமடைந்தனர்

மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் நீலகிரி மாவட்டம் உலக சுற்றுலா வரைபடத்தில் இடம் பெற்றுள்ள மாவட்டமாகும். குறிப்பாக, உலகப் புகழ்பெற்ற அரசு தாவரவியல் பூங்காவைக் காண நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், பல்வேறு நாடுகளில் இருந்து அரிய வகை மலர்கள், மரங்கள், மூலிகைச் செடிகள் என நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.இந்த நிலையில், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் கடிகாரம் போன்ற வடிவம் அமைக்கப்பட்டு உள்ளது. கடிகாரத்தில் இருப்பது போன்று புல்களை கொண்டு எண்கள், கடிகார முள்கள் அமைக்கப்பட்டு உள்ளது. இது சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது.



## ஈரோட்டில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற பணி புறக்கணிப்பு

ஈரோடு, நவ. 22:

ஒசூரில் வழக்கறிஞர் வெட்டப்பட்ட சம்பவத்தை கண்டித்து ஈரோடு மாவட்டத்தில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற பணி புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தர்மபுரி மாவட்டம் ஓசூர் நீதிமன்றம் அருகே வழக்கறிஞர் கண்ணன் என்பவரை சீருடையில் இருக்கும்போது மர்ம நபர் ஒருவர் வெட்டி படுகொலை செய்ய முயன்றார். இச்சம்பவம் நாடு முழுவதும் இருக்கும் வழக்கறிஞர்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதையடுத்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்களின் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பில் வழக்கறிஞர் கொடூரமாக வெட்டப்பட்ட சம்பவத்தை கண்டித்தும், வழக்கறிஞர் விரோத போக்கை தடுத்திடும் வகையில் வழக்கறிஞர்கள் பாதுகாப்பு சட்டத்தை அவசர சட்டம் வாயிலாக அமல்படுத்திட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க கோரி நீதிமன்ற பணி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவித்தனர். இதன்பேரில், ஈரோடு மாவட்டத்தில் அட்வகேட் அசோசியேசன், ஈரோடு பார் அசோசியேசன் சார்பில், ஈரோடு சம்பத்நகரில் உள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றம் மற்றும் பவானி, கோபி, சத்தியமங்கலம், கொடுமுடி, பெருந்துறை உள்ளிட்ட மாவட்டத்தில் பணியாற்றும் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இத்தகவலை அட்வகேட் அசோசியேசன் தலைவர் துரைசாமி தெரிவித்தார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# குழந்தைகள் நலக்குழுக்களுக்கு தலைவர், உறுப்பினர்கள் நியமனம்: தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்

ஊட்டி, நவ.22-

நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

2015ம் ஆண்டின் இளைஞர் நீதிச்(குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு)சட்டத்தின் விதிமுறைகளின்படி அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் நலக்குழுக்களுக்கு தலைவர் (ம) உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குழந்தைகள் நலகுழுவிற்கு ஒரு பெண் உட்பட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர் மற்றும் இப்பதவி அரசு பணி அல்ல.குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூகபணி அல்லது சமூகவியல் அல்லது மனித மேம்பாடு அல்லது மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி ஆகியவற்றுள் ஏதெனும் ஒன்றில் பட்டம் பெற்றும் குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவராக இருத்தல் வேண்டும்.குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சமூகப்பணி அல்லது சமூகவியல் அல்லது மனித உடல்நலம் அல்லது கல்வி அல்லது மனித மேம்பாடு அல்லது மாற்றத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்று தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். மேலும், பத்திரிக்கையில் செய்தி வெளியிடும் நாளில், விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.இதற்கான விண்ணப்பப்படிவத்தை அந்தந்த மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது துறை சார்ந்த இணையதள முகவரியிலிருந்து விண்ணப்பதாரர் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். தகுதி வாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அனைத்து படிவத்தில் 04.12.2024ஆம் தேதிக்குள் இயக்குநர்குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, எண்: 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 010. கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 04.12.2024க்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இதுகுறித்துஅரசின் முடிவே இறுதியானது என மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்

# உணவகங்களில் சைவம், அசைவ உணவிற்கு தனித்தனி பாத்திரங்கள் பயன்படுத்த வேண்டும்

## கலெக்டருக்கு நுகர்வோர் பாதுகாப்பு மையம் மனு

ஊட்டி. நவ.22-

உணவகங்களில் சைவம் அசைவம் உணவிற்கு தனித்தனி பாத்திரங்களில் பயன்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய பொது செயலாளர் சிவசுப்பிரமணியம் உணவு பாதுகாப்பு துறை ஆணையாளர் மற்றும் மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது. நீலகிரியில் உள்ள உணவகங்களில் புரோட்டா, சப்பாத்தி, உள்ளிட்ட பல்வேறு உணவு பொருட்களுக்கு சாம்பார் வழங்கப்படுவது இல்லை. இதற்கு தனியாக பணம் கொடுத்துதான் இதர குழம்பு வாங்கி சாப்பிட வேண்டிய கட்டாயம் உள்ளது. இது குறிப்பாக கூடலூர் பந்தலூர் பகுதிகளில் மட்டுமே கட்டாயபடுத்த படுகிறது. இதனை தவிர்த்து மேற்படி உணவுகளுக்கு சாம்பார் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இதர குழம்பு வகைகள் நுகர்வோர் விருப்பத்தின் அடிப்படையில் மட்டும் வாங்கி கொள்ள அனுமதிக்க வேண்டும். அதுபோல உணவகங்களில் சைவம், அசைவம் ஆகியன ஒரு கைப்பிடியுடன் கூடிய பாத்திரங்களை பயன்படுத்துகின்றனர். இதனால் சைவ அசைவ உணவுகள் கலப்பு ஏற்படுகிறது. இதனை தவிர்க்க வெளவெறு பாத்திரங்களில் குழம்பு வகைகளை பராமரிக்க வேண்டும். அயோடின் கலக்காத உப்புகள் உணவுக்கு விற்பனை செய்ய கூடாது என்ற அரசாணை உள்ளது. இந்நிலையில் சில கடைகளில் பதபடுத்தும் உப்புக்கள் மளிகை கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வணிகர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கவும், சுகாதார ஆய்வாளர்கள், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வின் போது இதனையும் கருத்தில் கொண்டு பதப்படுத்துதல் உப்பினை விற்பனை செய்வதை தடுக்க வேண்டும். உணவகங்களில் டீ முதல் சாப்பாடு வரையிலான உணவு பொருட்கள் விலை திடீரென இந்த மாதம் உயர்த்தப்பட்டு உள்ளது. வியாபார சங்கம் முடிவுசெய்து விலை உயர்த்தபட்டதாக கூறப்படுகிறது இதுகுறித்து மாவட்ட கலெக்டர் தலைமையிலானவிலை கண்காணிப்பு குழு சார்பில் இதனை கண்காணித்து உணவகங்களில் உயர்த்தப்பட்டுள்ள விலையினை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

## ஏர்பிஎன்பி விருந்தினர்களுக்கு ஆரோக்கிய விழிப்புணர்வு, யோகா கற்றுக்கொடுக்கும் நடிகை சாரா அலிகான்

கோவை ,நவ.22-

உலகம் முழுவதும் விருந்தினர்களுக்கு தங்குமிடஅனுபவங்களையும் வழங்குவதில் முன்னணி நிறுவனமாக திகழும் ஏர்பிஎன்பி நிறுவனம், சுற்றுலா பயணிகள் மற்றும் விருந்தினர்களுக்கு தங்களின் புதிய திட்டங்கள் மூலம் பல்வேறு அனுபவங்களை வழங்கி வருகிறது.

'சமீபத்தில் இதன் ஐகான்ஸ் என்னும் பிரபலங்களின் வீடுகளில் விருந்தினர்கள் தங்கும் திட்டம் மிகுந்த வரவேற்பை பெற்ற நிலையில் தற்போது தங்கள் வாடிக்கையாளர்களுக்கு மற்றொரு புதிய அனுபவத்தை வழங்கும் வகையில் பாலிவுட் நடிகையும், உடற்பயிற்சி மற்றும் பயண ஆர்வலருமான சாராஅலிகான், கோவாவில் 4விருந்தினர்கள் கொண்ட குழுவிற்கு பிரத்யேக ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு மற்றும் யோகா பயிற்சியை முதன் முறையாக வழங்க இருக்கிறார். ரம்மியமான இயற்கை சூழலில் பசுமைநிலப்பரப்புக்குமத்தியில் இந்த யோகா பயிற்சியை அவர் வழங்க இருக்கிறார். சினிமா துறையில் பிரபல நட்சத்திரமாக திகழும் சாரா அலிகான் தனது பரபரப்பான படப்பிடிப்புகளுக்கு மத்தியிலும் உடற்பயிற்சி மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர் ஆவார். இப்போது அவர் ஏர்பிஎன்பி விருந்தினர்களுக்கு ஆரோக்கியம் மற்றும் யோகா குறித்த பயிற்சியை அளிக்க இருக்கிறார். இதில் பங்கேற்கும் விருந்தினர்கள் இயற்கை சூழலுக்கு மத்தியில்சாரா அலிகான் உடன் யோகா பயிற்சி செய்யும் அற்புதமான அனுபவத்தை பெறுவதோடு, அவர்களுடன் ஆரோக்கியம் குறித்து பல்வேறு விஷயங்களையும் அவர் பகிர்ந்து கொள்ள இருக்கிறார்.

இது குறித்து சாரா அலிகான் கூறுகையில், ஏர்பிஎன்பி சார்பில் கோவாவில் நடைபெறும் இந்த சிறப்பு ஆரோக்கியம் மற்றும் யோகாசனத்திற்கு வரும் விருந்தினர்களை வரவேற்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இயற்கை அழகால் சூழப்பட்டு உள்ள கோவாவில், மனம், உடல் மற்றும் ஆன்மாவிற்கு ஆரோக்கியம் தரும் யோகா செய்வதில் நாம் கவனம் செலுத்துவோம். இது ஒரு மறக்க முடியாத அனுபவத்தை விருந்தினர்களுக்கு வழங்கும் என்று தெரிவித்தார். குறித்து ஏர்பிஎன்பி-ன் இந்தியா, தென்கிழக்கு ஆசியா, ஹாங்காங் நாட்டிற்கான பொது மேலாளர் அமன்பிரீத்பஜாஜ் கூறுகையில், எங்களின் சமீபத்திய தொகுப்பாளராக சாராவை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்திய சுற்றுலாப் பயணிகளைப் பொறுத்தவரை பல்வேறு சுற்றுலா பகுதிகளுக்கு சென்று வித்தியாசமான அனுபவத்தை பெற விரும்புகிறார்கள். கலாச்சாரத்துடன் இணைந்த ஒரு புதிய அனுபவத்தை அவர்களுக்கு நாங்கள் வழங்க இருக்கிறோம். இது ஒரு சுற்றுலாப் பயணமாக மட்டுமல்லாமல் ஆரோக்கிய சுற்றுலா பற்றிய ஒருவிழிப்புணர்வையும் அவர்களுக்குவழங்கும் என்று தெரிவித்தார்.



நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் ஊட்டி ஏடிசி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை திரளான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலெக்டர் கிரேஸ் பச்சாவ்,நினைவு பரிசுகளை வழங்கினார்.



மதுரவாயல் தொகுதிக்கு உட்பட்ட 148 வது வார்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் புதியதாக கட்டிடப்பட்ட வி.ஒ.ஏ.அலுவலகம் மற்றும் அங்கன்வாடி மையம் ஆகியவற்றை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ திறந்து வைத்தார்.உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் வி.வி.கிரிதரன், வட்டாட்சியர் கு. ஜெயகுமார் ,வட்ட செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ், மாவட்ட பிரதிநிதி எஸ்.ரவி உள்ளனர்.

# செல்போன் மற்றும் பணத்தை பறித்த 5 பேர் கைது

. சென்னை நவ 22-

சென்னை, சூளைமேடு, பெரியார் பாதை பகுதியில் வசித்து வரும் சக்தி, என்பவர் சூளைமேடு, திருவள்ளுவர்புரம் 2வது தெருவில் தனது நண்பர்கள் அரவிந்த் மற்றும் கோகுல் ஆகியோருடன் பேசிக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த சில நபர்கள் மேற்படி சக்தி மற்றும் அவரது நண்பர்களை கைகளால் தாக்கி, கத்தியை காட்டி மிரட்டி, அவர்கள் வைத்திருந்த 2 செல்போன்கள் மற்றும் G pay மூலம் பணம் ரூ.800/-ஐ பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்க்கொண்டனர். பணம் மற்றும் செல்போன் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்டகிஷோர்குமார்,விக்னேஷ், அப்துல்சமத், கரண் (எ) கரண்குமார்,அபி (எ) அபிஷேக், ஆகிய 5 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து ஜி.பே மூலம் பணம் ரூ.800/- மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் கைது செய்யப்பட்ட கிஷோர்குமார் மீது வழிப்பறி, கஞ்சா என 3 குற்ற வழக்குகளும், விக்னேஷ் மீது கொலைமுயற்சி, வழிப்பறி என 8 குற்ற வழக்குகளும், கரண் (எ) கரண்குமார் மீது கொலை, கொலைமுயற்சி, வழிப்பறி, அடிதடி என 15 குற்ற வழக்குகள் உள்ளதும், அப்துல்சமத் மீது 1 வழிப்பறி வழக்கு உள்ளதும் தெரியவந்தது. அவர்கள் சி றை யி ல் அடைக்கப்பட்டனர்.

FORM NO.4
PROCLAMATION REQUIRING THE APPEARANCE OF A PERSONACCUSED
(Under Sec.82 of CrP.C.)
C.C.No. 133/2016
The State Reprsented by The Forest Range Officer, Kargudi Range, Kargudi,
O.R.No. 04/2006-07,
U/s. 21(d)(e)(f) of The Tamil Nadu Forest Act, 1882 (No. 5 of 1882) and 45 of TNF Act (Amended by TN Act 45 of 1979)
3,4 of The Tamil Nadu Rosewood Trees (Conservation)Act, 1994 (Tamil Nadu Act 1 of 1995)
......Complainant
-Vs.-
1.Mr. Kumar, Gudalur.
2.Mr.Raman, Chalivayal
.....................Accused No.4,5
(as in original rank in mother case)
WHEREAS, Complaint has been made before me that Mr. Raman, Gudalur has suspected to have committed the offences punishable under section Act V, 21(d)(e)(f) of The Tami Nadu Forest Act, 1882 and 45 TNF Act (Amended by TN Act 1979)& 3,4 of Tamil Nadu Rosewood Trees(Conservation) Act, 1994 and it has been returned to a warrant of arrest thereupon issued that the said Mr. Raman cannot be found, and whereas, it has been shown to my, satisfaction that the said Mr. Raman has absconded, to avoid the service of the said warrant; Proclamation is hereby made that the said Mr. Kumar is required to appear at Principal District Munsif-cum-Judicial Magistrate Court, Gudalur, The Nilgiris, before this court to answer the said complaint on or before the 27" day of December 2024 at 10.00 A.M.
Dated this 08th day of November 2024.
Principal District Munsif-cum-
Judicial Magistrate, Gudalur.

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
உதகமண்டலம்
திருமதி சிந்தாமணி,
க.பெ. O.S.பீமன்,
க.எண். 3/125, இத்தலார்,
இத்தலார் அஞ்சல்,
நீலகிரி மாவட்டம்.
-----மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர் அவர்கள்
குந்தா தாலுகா.
-------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
எனது கணவர் O.S.பீமன், த.பெ. சேலைகவுடர் கடந்த 29.10.1998 அன்று க.எண். 3/125, இத்தலார், இத்தலார் அஞ்சல், நீலகிரி மாவட்டம். என்ற முகவரியில் இறந்து விட்டார். அவரது இறப்பினை இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். தற்போது அவரது இறப்பு சான்றிதழ் கேட்டு ஊட்டி கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 10 நாட்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
சிந்தாமணி,
மனுதாரர்.

FORM NO.4
PROCLAMATION REQUIRING THE APPEARANCE OF A PERSONACCUSED
(Under Sec.82 of CrP.C.)
C.C.No. 133/2016
The State Reprsented by The Forest Range Officer, Kargudi Range, Kargudi,
O.R.No. 04/2006-07,
U/s. 21(d)(e)(f) of The Tamil Nadu Forest Act, 1882 (No. 5 of 1882) and 45 of TNF Act (Amended by TN Act 45 of 1979)
3,4 of The Tamil Nadu Rosewood Trees (Conservation)Act, 1994 (Tamil Nadu Act 1 of 1995)
.........Complainant
-Vs.-
1.Mr. Kumar, Gudalur.
2.Mr.Raman, Chalivayal
.....................Accused No.4,5
(as in original rank in mother case)
WHEREAS, Complaint has been made before me that Mr. Kumar, Gudalur has suspected to have committed the offences punishable under section Act V, 21(d)(e)(f) of The Tami Nadu Forest Act, 1882 and 45 TNF Act (Amended by TN Act 1979)& 3,4 of Tamil Nadu Rosewood Trees(Conservation) Act, 1994 and it has been returned to a warrant of arrest thereupon issued that the said Mr. Kumar cannot be found, and whereas, it has been shown to my, satisfaction that the said Mr. Kumar has absconded, to avoid the service of the said warrant; Proclamation is hereby made that the said Mr. Kumar is required to appear at Principal District Munsif-cum-Judicial Magistrate Court, Gudalur, The Nilgiris, before this court to answer the said complaint on or before the 27" day of December 2024 at 10.00 A.M.
Dated this 08th day of November 2024.
Principal District Munsif-cum-
Judicial Magistrate, Gudalur.

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
உதகமண்டலம்
திரு சாகுல் அமீது,
த.பெ. அலி முகமது,
க.எண். 8/203, கப்பத்தொரை,
நஞ்சநாடு,
நீலகிரி மாவட்டம்.
-----மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர் அவர்கள்
உதகை தாலுகா.
-------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
எனது தந்தை அலி முகமது, த.பெ.பீர் முகம்மது கடந்த 01.05.1998 அன்று க.எண். 8/203, கப்பத்தொரை, நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம் என்ற முகவரியில் இறந்துவிட்டார். அவரது இறப்பினை இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். தற்போது அவரது இறப்பு சான்றிதழ் கேட்டு ஊட்டி கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 10 நாட்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
சாகுல் அமீது,
மனுதாரர்.

மாண்புமிகு சிறப்பு மாவட்ட நீதிமன்றம், மதுரை.
(FOR M.C.O.P.CASES)
I.A.No: 544 / 2024 in
M.C.O.P.No: 584 / 2023
1. செந்தில்குமாரி,
W/o.லேட்.சுதாகரன்,
2. மைனர்.சுவேதா,
D/o.லேட்.சுதாகரன்,
3. மைனர்.ஜெயதர்சன்,
S/o.லேட்.சுதாகரன்,
அனைவரது முகவரி: சங்கர் காம்பவுண்ட், வத்தலக்குண்டு ரோடு, வில்லாணி, K.போத்தம்பட்டி அஞ்சல், உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்.
---- மனுதாரர்கள்
--- எதிரிடை ---
பிரகாஷ்,
எண்.143/11, தடாகம் ரோடு,
வேலாண்டிபாளையம்,
கோயம்புத்தூர்-641025.
--- 3-ம் எதிர்மனுதாரர் / Proposed Party
அறிவிப்பு
மேற்படி மனுதாரர்கள் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள வழக்கின் மனுவில் மேற்படி 3-ம் எதிர்மனுதாரர் / Proposed Party ஆஜராக 17.12.2024-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணையிருந்தால் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
N.பழனிச்சாமி,
U.செல்வக்குமார்,
வழக்கறிஞர்கள், மதுரை.

சேலம் சிறப்பு சார்பு நீதிமன்றம் எண். 2 முன்பாக.
I.A.No. 1/2024 In M.C.O.P.No.363/2022
The Managing Director,
Tamil Nadu State Transport Corporation Ltd.,
No.12, Ramakrishna Road,
Salem -7.
...மனுதாரர்
இடையே
K.Suresh,
No.35, Annai Sathya Nagar,
Bharathiyar Road,
Coimbatore District - 641 044.
...1 ம் எதிர்மனுதாரர்
1 ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அறிவிப்பு
மோட்டார் வாகன விபத்தில் மனுதாரருக்கு சொந்தமான பேருந்து சேதமடைந்ததற்காக இழப்பீடு கோரி தங்களுக்குஎதிராகதாக்கல் செய்துள்ளமேற்படி வழக்கில் தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதற்காக வருகின்ற 27.11.2024 ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நீங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
/கோர்ட் உத்தரவுப்படி/
S.சந்திரசேகரன்,
வழக்கறிஞர், சேலம்.

ராமநாதபுரம் நகரில் தொடர் மழையால்

# வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் கலெக்டர், சட்டமன்ற உறுப்பினர் நேரில் ஆய்வு



**ராமநாதபுரம், நவ. 22-**

ராமநாதபுரம் நகரில் தொடர் மழையால் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை கலெக்டர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு வெள்ளநீரை வெளியேற்ற போர்க்கால நடவடிக்கை எடுத்தனர்.

ராமநாதபுரம் நகராட்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் முன்னிலையில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தொடர் மழையின் காரணமாக மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் ராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட தங்கப்பா நகர், மாரியம்மன் கோவில் தெரு, பாத்திமா நகர், பெரியார் நகர் அருகாமையில் உள்ள மதுரை ரோடு தேசிய நெடுஞ்சாலை பகுதியில் அதிகளவு மழை நீர் தேங்கியுள்ள இடங்களை ஆய்வு செய்ததுடன் நகராட்சி நிர்வாகம் மூலம் மோட்டார் வைத்து மழை நீர் அகற்றும் பணி நடைபெறுவதை பார்வையிட்டதுடன் மழைநீர் வடிகால் வாய்க்கால் மூலம் மழை நீர் தேங்காமல் செல்லும் வகையில் உடனடியாக சீரமைத்து பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் கண்காணித்திட வேண்டுமென நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். மேலும் மதுரை தேசிய நெடுஞ்சாலை பகுதியில் தேசிய நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பில் உள்ள பாலம் பழுதாக உள்ளதன் மூலம் சாலையில் தண்ணீர் தேங்குவதால் உடனடியாக நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பாலத்தை சரி செய்திட அலுவலர்களுக்கு கலெக்டர் சிம்ரன்ஜித் சிங் காலோன் அறிவுறுத்தினார். இதனை தொடர்ந்து கலெக்டர் நிருபர்களிடம் கூறியதாவது:- ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு வார காலமாக மிதமான மழை பெய்து வந்த நிலையில் நேற்று அதிகளவு மழை பெய்துள்ளது. இதில் ராமேசுவரத்தில் 43 சென்டி மீட்டரும், தங்கச்சிமடத்தில் 33 சென்டி மீட்டரும், பாம்பனில் 27 சென்டி மீட்டரும், ராமநாதபுரத்தில் 12 சென்டி மீட்டரும், ஒரே நாளில் மழை பெய்து. நேற்று முன்தினம் இரவு மழையின் வேகம் குறைந்தது. தற்பொழுது ராமநாதபுரம், ராமேஸ்வரம், பாம்பன் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்து கொண்டிருக்கிறது. அதிலும் ராமநாதபுரத்தில் அதிகமாக மழை பெய்துள்ளது. இதற்கேற்ப முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்துத் துறை அலுவலர்களும் அந்தந்த பகுதிகளில் முகாமிட்டு மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். நேற்றைய தினம் அதிகளவு மழை பெய்ததையொட்டி சக்கரக்கோட்டை, மண்டபம், பாம்பன் பகுதிகளில்; 3 தங்கும் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு 150-க்கும் மேற்பட்ட நபர்கள் பாதுகாப்புடன் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கான உணவுகள் வழங்கியதுடன், மருத்துவ முகாம்கள் அமைத்து மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது.

பின்னர் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் மழைநீர் அகற்றுவதற்கு தேவையான பணிகள் நடைபெற்று வருகிறது. அது மட்டுமின்றி பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் காற்றில் சாய்ந்த மரங்கள் ஆகியவை அகற்றுவதற்கு ஏற்ப ஜேசிபி வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்துத்துறை அலுவலர்களும் தேவையான மீட்பு பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் உள்ளார்கள். அதேபோல் பொதுமக்களுக்கு பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வேளாண் மைத்துறையின் மூலம் அதிக மழை உள்ள பகுதிகளை கண்காணித்து விவசாயிகளுக்கான வழிகாட்டுதலை மேற்கொள்வார்கள் அதே போல் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மூலம் தடையின்றி மின்சாரம் வழங்கவும், பழுது ஏற்பட்டால் மின் மாற்றிகளை சரி செய்யவும், மின்கம்பங்கள் சாய்ந்தால் உடனடியாக சரி செய்திடும் அளவிற்கு பணியாளர்கள் நியமித்து கண்காணிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுவாக மாவட்டத்தில் தொடர் மழையின் காரணமாக எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் பணிகள் முழுமையாக கண்காணித்து மேற்கொள்ளப்பட்டுவரும். இவ்வாறு கூறினார். இந்த ஆய்வில் ராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், ராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் கே.டி.பிரபாகரன், ராமநாதபுரம் நகர் மன்ற துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், ராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அஜிதா பர்வின் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அலங்காநல்லூரில் சந்ததம் பால் சுவாமிகள் மடாலய கும்பாபிஷேகம்



**அலங்காநல்லூர், நவ. 22-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் 4வது வார்டில் அமைந்துள்ள அருளாளர் ஸ்ரீசந்ததம் பால் சுவாமிகளின் மடாலய மஹா கும்பாபிஷேக விழா மற்றும் குருபூஜை விழாவும் நடைபெற்றது.

இதில் இரண்டு கால யாக பூஜைகளை தொடர்ந்து யாக சாலையில் இருந்து சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க கடம் புறப்பாடாகி அழகர்கோவில், காசி, ராமேஸ்வரம் உள்ளிட்ட புனித தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வலம் வந்து புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுற்று வட்டாரங்களைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

# பரமக்குடியில் வழக்கறிஞர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்



**பரமக்குடி, நவ. 22-**

பரமக்குடியில் வழக்கறிஞர் சங்கத்தினர் நீதிமன்ற வளாகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஓசூரில் வழக்கறிஞர் கண்ணன் சமூக விரோதிகளால் சில தினங்களுக்கு முன்பு தாக்கப்பட்டார். அவருக்கு ஆதரவாக மாநிலம் தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. பரமக்குடியில் வழக்கறிஞர் சங்கத்தின் சார்பில் நீதிமன்ற வளாகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பரமக்குடி வழக்கறிஞர்கள் சங்க தலைவர் ஆர்.பூமிநாதன் தலைமை தாங்கினார். செயலாளர் நா.யுவராஜ் முன்னிலை வகித்தார். வழக்கறிஞர்கள் சமூக விரோதிகளால் தாக்கப்படுவதும், கொலை செய்யப்பட்டு வருவதால் வழக்கறிஞர்களுக்கான பாதுகாப்பு சட்டத்தை உடனடியாக மத்திய,மாநில அரசுகள் கொண்டு வர வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பினர்.ஆர்ப்பாட்டத்தில் மூத்த, இளம் வழக்கறிஞர்கள் மற்றும் பெண் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

# திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சஷ்டி பூஜை

**நத்தம், நவ. 22-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கார்த்திகை மாத தேய்பிறை சஷ்டி பூஜை விழா நடந்தது. இதையொட்டி முருக பெருமானுக்கு பால்,பழம்,பன்னீர், விபூதி,சந்தனம், புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.மேலும் அருகிலுள்ள காமாட்சி மவுனகுருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இதைபோலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள முருகப்பெருமான் சன்னதியிலும் சஷ்டியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட அளவிலான சிலம்பம் போட்டி:

# ஒட்டன்சத்திரம் லோட்டஸ் விளையாட்டு கழக மாணவர்கள் முதலிடம் பெற்று சாதனை



**ஒட்டன்சத்திரம், நவ. 22-**

2024-2025 பள்ளிக்கு இடையிலான திண்டுக்கல் மாவட்ட அளவிலான சிலம்பம் போட்டி ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. அதில் லோட்டஸ் விளையாட்டுக் கழக மாணவர்கள் 20 பேர் கலந்து கொண்டு முதலிடம் பெற்றனர் .

14 வயதுக்குட்பட்ட ஒற்றை கம்பு போட்டியில் ஸ்ரீநிதி 1-வது இடம் ,கே.பி சுஹிதா 2-வது இடம், ஹேமலதா 3-வது இடம் பிடித்தனர். 14 வயதுக்குட்பட்ட இரட்டை கம்பு போட்டியில் பிரவஹன்ஷினி 1-வது இடம், அஃப்ரின் ஆயிஷா பர்வின் 2-ம் இடம் பிடித்தனர். 14 வயதுக்குட்பட்ட கம்பு சண்டையில் 35 எடைக்கு கீழே உள்ள பிரிவில் பிந்து 1-வது இடம், 40 எடைக்கு கீழே சுபி மோனிஸ்டார் 3-வது இடம் பிடித்தனர். 17 வயதுக்குட்பட்ட ஒற்றை கம்பு போட்டியில் அபினேஷ் குமார் முதலிடமும், யோகா ஸ்ரீ 2-ம் இடமும் பிடித்தனர். 17 வயதுக்குட்பட்ட இரட்டை கம்பு போட்டியில் அனிசா மேத்யூ 2-வது இடம் பெற்றார். 19 வயதுக்குட்பட்ட ஒற்றை கம்பு போட்டியில் கனிஷ்கா 1-வது இடமும், சுனில் ஜார்ஜ் 1-வது இடமும் பிடித்தனர். 19 வயதுக்குட்பட்ட இரட்டை கம்பு போட்டியில் சுமி செல்வஸ்டார் 1-வது இடமும், 19 வயதுக்குட்பட்ட கம்பு சண்டை போட்டியில் 50 எடைக்கு கீழ் பிரிவில் அகல்யா 2-வது இடமும் பிடித்தனர் .

வெற்றியாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் மற்றும் பயிற்சியாளர் ராஜா கிரிதரன்.ஜே மற்றும் நிறுவனர் கே.பழனிசாமி ஆகியோருக்கு பெற்றோர்கள் அனைவரும் வாழ்த்துகள் தெரிவித்தனர். முதலிடம் பெற்றவர்கள் மாநில அளவிலான சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றனர்.

# டிச. 31-ம் தேதிக்குள் அவ்வையார் விருது பெற விண்ணப்பிக்கலாம்

## விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன் தகவல்

**விருதுநகர், நவ. 22-**

பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு 2025-ம் ஆண்டு மார்ச் -8-ம் தேதி சர்வதேச மகளிர் தின விழாவில் அவ்வையார் விருது வழங்க தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தமிழ் நாட்டை பிறப்பிடமாக கொண்டவர், 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கைகள், சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக சிறந்து விளங்கும் மகளிராக இருத்தல் வேண்டும்.

பெண்களுக்கான இச்சமூகசேவையை தவிர்த்து வேறு சமூக சேவைகள் இவ்விருதுக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஔவையார் விருது குறித்த விவரங்கள் அனைத்தும் தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (https://awards.tn.gov.in) 18.11.2024 முதல் வெளியிடப்பட்டுள்ளது. இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்.31.12.2024. இணையதளம் மூலம் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். இணையதளத்தில் பதிவு செய்த பிறகு அனைத்து ஆவணங்களையும் விருதுநகர் மாவட்ட சமூகநல அலுவலகத்தில், கையேடாக (Booklet) தயார் செய்து தமிழ் (ம) ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து தலா 3 நகல்கள் அனுப்பிட வேண்டும். கருத்துருக்கள் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி: மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், விருதுநகர். 04562- 252701 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீவில்லி.யில் வழக்கறிஞர்கள் சாலை மறியல் போராட்டம்



**விருதுநகர், நவ. 22-**

ஸ்ரீவில்லிபுத்தூர் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் ஒசூரில் வழக்கறிஞர் கண்ணன் வெட்டி படுகொலை செய்த சம்பவத்தை கண்டித்தும் வழக்கறிஞர்கள் பாதுகாப்புச் சட்டத்தை மத்திய மாநில அரசுகள் உடனடியாக நிறைவேற்ற கோரியும் ஸ்ரீவில்லிபுத்தூர் வழக்கறிஞர் சங்கம் சார்பில் வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் நீதிமன்ற பணிகளை புறக்கணிப்பது என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று வழக்கறிஞர்கள் ஒன்று கூடி ஸ்ரீவில்லிபுத்தூர் சிவகாசி சாலையில் உள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு முன்பு கண்டன கோஷமிட்டனர். தொடர்ந்து சுமார் அரை மணி நேரம் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் சிவகாசி சாலையில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

சுமார் 40 நிமிடங்கள் வழக்கறிஞர்கள் மறியல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து ஸ்ரீவில்லிபுத்தூர் டிஎஸ்பி ராஜா மற்றும் போலீசார் விரைந்து வந்து மறியலில் ஈடுபட்ட வழக்கறிஞர்களிடம் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர் அனைவரும் கலைந்து சென்றனர்.

தொடர்ந்து வழக்கறிஞர் சங்கத்தினர் விருதுநகருக்கு சென்று மாவட்ட கலெக்டர் ஜெயசீலனிடம் வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்பு கோரி மனு கொடுக்க சென்றனர். மேலும் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு காரணமாக நீதிமன்றத்தில் அனைத்து பணிகளும் பாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அருண் தம்புராஜ் தலைமையில் மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. அருகில் கலெக்டர் சங்கீதா, திட்ட இயக்குனர் மோனிகா ராணா, வருவாய் அலுவலர் சக்திவேல் ஆகியோர் உள்ளனர்.



தேனி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் நேற்று மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் புதிய வடிவிலான சட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் புகைப்பட கண்காட்சியினை மாவட்ட முதன்மை நீதிபதி சொர்ணம் ஜெ. நடராஜன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

மாவட்ட தலைவர் எம்.துரைப்பாண்டி தலைமையில்

# மதுரை தெற்கு மாவட்ட த.மா.கா உறுப்பினர்கள் சேர்க்கை முகாம்



**திருமங்கலம், நவ. 22-**

மதுரை புறநகர் தெற்கு மாவட்ட தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் சேர்க்கை முகாம் மாவட்டத் தலைவர் எம்.துரைப்பாண்டி தலைமையில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி.,யின் ஆணைக்கிணங்க மாநிலம் முழுவதிலும் உறுப்பினர் சேர்க்கை முகாம்கள் நடைபெற்று வருகிறது.

இதன் ஒருபகுதியாக மதுரை புறநகர் தெற்கு மாவட்ட த.மா.கா சார்பில் மதுரை வில்லாபுரம்,ஹவுசிங்போர்டு காலனி உள்ளிட்ட பகுதிகளில் உறுப்பினர் சேர்க்கை முகாம் சிறப்பாக நடைபெற்றது.இந்த முகாமிற்கு மதுரை புறநகர் தெற்கு மாவட்ட த.மா.கா தலைவர் எம்.துரைப்பாண்டி தலைமை வகித்தார்.பகுதி தலைவர் எம்.எம்.ராஜா முன்னிலை வகித்தார்.மாநில கொள்கை பரப்பு செயலாளர் ஏ.எஸ்.பி.சிவசுந்தரம் உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்து உரையாற்றினார்.இந்த முகாமில் பொதுமக்கள் ஏராளமானோர் ஆர்வமுடன் கலந்து கொண்டு விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து கொடுத்து கட்சியில் இணைந்தனர்.இந்நிகழ்ச்சியில் மாநில சிறப்பு அழைப்பாளர்கள் துரைராஜா, துரை நாகராஜன்,ஸ்ரீதர், மாவட்ட துணை தலைவர்கள் மாணிக்கம்,ராமமூர்த்தி, நாகமலைச்சாமி,கொடிகாத்தகுமரன்,மாவட்ட தலைவர் முத்து,காமராஜ்,கருப்பசாமி, முருகன், பாண்டி,ரவிக்குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மேலூரில் பாங்க் ஆப் பரோடா புதிய வங்கி கிளை திறப்பு விழா



**மேலூர், நவ. 22-**

மேலூரில் பாங்க் ஆப் பரோடா வங்கியின் மதுரை மாவட்டத்தின் 56 வது புதிய வங்கி கிளை மேலூர் அழகர் கோவில் ரோட்டில் தொடங்கப்பட்டது. இதனை பாங்க் ஆப் பரோடா நிர்வாக இயக்குநர் சஞ்சய் விநாயக் முதலியார், சென்னை மண்டலத்தின் பொது மேலாளர் மற்றும் மண்டல தலைவருமான ஏ. சரவணகுமார், மதுரை பிராந்தியம், பிராந்திய மேலாளர் எம்.ஜெய்கிஷன் ஆகியோர் காணொளி காட்சி மூலமாக சென்னையில் இருந்து வங்கியை திறந்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து புதிய வங்கியை மதுரை பாங்க் ஆஃப் பரோடா வங்கி துணை மண்டல மேலாளர் சரவணன், மேலூர் அல் அமீன் பள்ளி தாளாளர் எம்.ஷாஜகான், ஷீரடி சாய் ஜுவெல்லர்ஸ் உரிமையாளர் சாய்கிருஷ்ணகுமார், மேலூர் தாலுகா ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் கே.பாலகிருஷ்ணன், மேலூர் வங்கி கிளை மேலாளர் எம்.எஸ்.பூபதி ராஜா ஆகியோர் ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தனர். நிகழ்ச்சியில் தொழிலதிபர்கள், வர்த்தக வியாபாரிகள், வங்கி வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே பைக்கில் இருந்து தவறி விழுந்து டீக்கடைகாரர் பலி

**நத்தம், நவ. 22-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சேத்தூரை சேர்ந்தவர் கணேசமூர்த்தி(58). இவர் நத்தத்தில் அவுட்டர் பகுதியில் டீ கடை நடத்தி வந்தார். இந்நிலையில் கடந்த 17-ம் தேதி இரவு டீ கடையை அடைத்து விட்டு தனது பைக்கில் சின்ன அரவங்குறிச்சியை சேர்ந்த அழகு என்பவருடன் ஊருக்கு சென்று கொண்டிருந்தார்.பைக்கை கணேசமூர்த்தி ஓட்டி சென்றார்.நத்தம்- துவரங்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள புதூர் பகுதியில் சென்று கொண்டிருந்த போது நாய் குறுக்கே வந்தது.இதில் நாயின் மீது பைக் மோதியதில் இரண்டு பேரும் தடுமாறி கீழே விழுந்தனர். இதில் இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. ஆபத்தான நிலையில் அக்கம் பக்கத்தினர் இருவரையும் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனில்லாமல் கணேசமூர்த்தி நேற்று முன்தினம் இறந்து விட்டார். மேலும் இச்சம்பவம் குறித்து போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

### பார்டர்-கவாஸ்கர் டிராபி தொடர்:

# இந்திய - ஆஸி. அணிகள் மோதும் முதல் டெஸ்ட் இன்று தொடக்கம்



**பெர்த், நவ. 22-**

பார்டர்-கவாஸ்கர் டிராபி தொடருக்கான முதல் டெஸ்ட் போட்டி இன்று ஆஸ்திரேலியா பெர்த் நகரில் தொடங்கவுள்ள நிலையில் ஜஸ்ப்ரிட் பும்ரா தலைமையிலான இந்திய - ஆஸ்திரேலியா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

**சுற்றுப்பயணம்...**

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி பார்டர்-கவாஸ்கர் கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இந்தியா- ஆஸ்திரேலியா இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் இந்திய நேரப்படி இன்று (வெள்ளிக்கிழமை) காலை 7.50 மணிக்கு தொடங்குகிறது. ரோகித் சர்மா இல்லாததால் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா இந்திய அணிக்கு கேப்டனாக செயல்பட உள்ளார்.

**வழி நடத்த முடியும்...**

முன்னதாக இந்தியா அதன் சொந்த மண்ணில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 3-0 என்ற கணக்கில் தோல்வியை தழுவியதால் இதில் குறைந்தபட்சம் 4-0 என்ற கணக்கில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற இக்கட்டான சூழலில் விளையாட உள்ளது. இந்நிலையில் முதல் போட்டிக்கு முந்தைய செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட இந்திய அணியின் கேப்டன் பும்ரா ஜாம்பவான் கபில் தேவ் போல வேகப்பந்து வீச்சாளரான தம்மால் இந்தியாவை நன்றாக வழி நடத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**எப்போதும் ஆதரவு...**

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு:- "வேகப்பந்து வீச்சாளர்கள் கேப்டனாக செயல்பட வேண்டும் என்பதற்கு நான் எப்போதும் ஆதரவு கொடுத்துள்ளேன். ஏனெனில் தந்திரோபாயங்கள் அடிப்படையில் அவர்கள் சிறந்தவர்கள். பேட் கம்மின்ஸ் ஆஸ்திரேலியாவுக்கு சிறப்பாக செயல்பட்டு வருகிறார். கடந்த காலங்களில் நிறைய ரோல் மாடல்கள் இருக்கிறார்கள். கபில் தேவ் போன்ற நிறைய வேகப்பந்து வீச்சாளர்கள் கடந்த காலங்களில் கேப்டன்ஷிப் ரோல் மாடல்களாக செயல்பட்டுள்ளார்கள். அதே போல நாமும் புதிய கலாச்சாரத்தை துவங்குவோம் என்று நம்புகிறேன்.

**திருப்தியடைவோம்...**

ஒருவேளை நீங்கள் அந்த தொடரில் (நியூசிலாந்து தொடரில்) வெற்றியை சந்தித்திருந்தாலும் இங்கே ஜீரோவிலிருந்துதான் இத்தொடரை தொடங்க வேண்டும். தோல்வியை சந்தித்தாலும் நீங்கள் ஜீரோவில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். அது தான் கிரிக்கெட்டின் அழகாகும். டி20 உலகக் கோப்பை வென்றதால் மற்ற தொடர்களில் நாங்கள் திருப்தியடைவோம் என்று அர்த்தமல்ல.

**புத்துணர்ச்சியுடன்...**

கண்டிப்பாக நியூசிலாந்துக்கு எதிரான கடினமான தொடரில் நாங்கள் ஏமாற்றத்தை சந்தித்திருந்தோம். ஆனால் அங்கிருந்து நாங்கள் எந்த பளுவையும் எடுத்து வரவில்லை. தற்போது புத்துணர்ச்சியுடன் இங்கே நாங்கள் வித்தியாசமான மனநிலையுடன் வந்துள்ளோம். இந்தியாவில் சந்தித்த தோல்வியிலிருந்து நாங்கள் எதையும் எடுத்து வரவில்லை. நாங்கள் இங்கே நேர்மறையுடன் நல்ல கிரிக்கெட்டை விளையாடி வெற்றி பெற முயற்சிப்போம்" என்று கூறினார்.

## இந்திய அணிக்கு பிரதமர் வாழ்த்து

6 அணிகள் இடையிலான 8-வது பெண்கள் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி பீகாரில் உள்ள ராஜ்கிர் நகரில் நடந்தது. இதன் இறுதிப்போட்டியில் நடப்பு சாம்பியனான இந்திய அணி, சீனாவை எதிர்கொண்டது. இதில் 1-0 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டத்தை தக்கவைத்தது.

இந்நிலையில் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பையை வென்ற இந்திய மகளிர் ஆக்கி அணிக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "இது ஒரு அபாரமான சாதனை... மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபியை வென்ற எங்கள் ஆக்கி அணிக்கு வாழ்த்துக்கள். அவர்கள் போட்டியின் போது சிறப்பாக விளையாடினர். அவர்களின் வெற்றி பல வரவிருக்கும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும்" என்று அதில் பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பையை வென்ற இந்திய மகளிர் ஆக்கி அணிக்கு பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், சீனாவை வீழ்த்தி ஆசிய சாம்பியன்ஸ் கோப்பையை வென்ற இந்திய மகளிர் ஆக்கி அணிக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். இது வரலாற்று வெற்றி. தேசத்திற்கு பெருமை . இந்திய அணி மேலும் வெற்றி பெற வாழ்த்துக்கள் . என தெரிவித்துள்ளார்.

## மஞ்ரேக்கருக்கு ஷமி பதிலடி

குஜராத் டைட்டன்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது ஷமி காயம் காரணமாக கடந்த சீசனில் விளையாடவில்லை. இதனால் அவரை ஏலத்திற்கு முன்பாக குஜராத் நிர்வாகம் கழற்றி விட்டுள்ளது. இதனிடையே அடிக்கடி காயத்தை சந்திக்கும் முகமது ஷமியை எந்த அணியும் பெரிய தொகைக்கு வாங்காது என்று முன்னாள் வீரர் சஞ்சய் மஞ்ரேக்கர் சமீபத்தில் விமர்சித்திருந்தார்.

அதன் காரணமாக 2025 ஐ.பி.எல். ஏலத்தில் ஷமியின் சம்பளம் கடந்த வருடத்தை விட வெகுவாக குறையலாம் என்று அவர் தெரிவித்திருந்தார். இந்நிலையில் மஞ்ரேக்கரின் இந்த கருத்திற்கு முகமது ஷமி பதிலடி கொடுத்துள்ளார். இது குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "பாபா ஜி க்கு ஜெய் ஹோ. உங்களுடைய அறிவை கொஞ்சம் உங்கள் எதிர்காலத்திற்காகவும் பயன்படுத்துங்கள். யாராவது எதிர்காலத்தை தெரிந்து கொள்ள விரும்பினால் ஐயாவை தொடர்பு கொள்ளவும்" என்று பதிவிட்டுள்ளார்.

## இஷான் கிஷான் குறித்து கவாஸ்கர்

அடுத்த ஐ.பி.எல். தொடருக்கு முன்னதாக வீரர்களின் மெகா ஏலம் வரும் 24, 25-ம் தேதிகளில் சவுதி அரேபியாவின்



ஜெட்டா நகரில் நடைபெற உள்ளது. இந்த ஏலத்திற்கு முன்னதாக இந்த தொடரில் பங்கேற்கும் 10 அணிகளும் அக்டோபர் 31-ம் தேதி அன்று தங்களது அணியில் தக்க வைக்கும் வீரர்களின் பட்டியலை வெளியிட்டு இருந்தன. இதில் கடந்த 8 ஆண்டுகளாக டெல்லி கேப்பிடல்ஸ் அணிக்காக விளையாடிய விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ரிஷப் பண்ட் விடுவிக்கப்பட்டது பலருக்கும் ஆச்சரியமாக அமைந்தது.

இந்நிலையில் அடுத்த ஆண்டு ஐபிஎல் தொடருக்காக டெல்லி அணி ரிஷப் பண்ட்டை தவிர்த்து இஷான் கிஷனை 15 முதல் 20 கோடி வரை கொடுத்து வாங்க வாய்ப்பு இருப்பதாக இந்திய அணியின் முன்னாள் வீரரான சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார். இது குறித்து பேசிய அவர் கூறுகையில் : தற்போதைய டெல்லி அணியில் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் அவசியம் தேவை. அதிலும் குறிப்பாக டி20 கிரிக்கெட்டில் போட்டியை தனியாக நின்று மாற்றக்கூடிய திறமை உள்ள ஒரு வீரரை அந்த அணி வாங்கும். அந்த வகையில் மும்பை அணியில் இடம் பெற்று விளையாடி வந்த இஷான் கிஷனை ரூ. 15 முதல் 20 கோடி குடுத்து வாங்க முயற்சிக்கும் என்று நினைக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## தயாராக உள்ளோம்: கம்மின்ஸ்

கிரிக்கெட் ரசிகர்களை மிகுந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கி இருக்கும் இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கோப்பை தொடர் இன்று தொடங்குகிறது. கிரிக்கெட் உலகின் பலம் வாய்ந்த இரு அணிகள் மோத உள்ளதால் இந்த தொடர் எதிர்பார்ப்பை எகிற வைத்துள்ளது. மேலும் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற கடந்த 2 பார்டர் -கவாஸ்கர் கோப்பை தொடர்களையும் இந்தியா கைப்பற்றியுள்ளது. இதனால் தொடர்ந்து 3-வது முறையாக வெல்லும் முனைப்புடன் இந்தியா களமிறங்க உள்ளது. அதே வேளையில் சொந்த மண்ணில் இந்தியாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்ற முனைப்பில் ஆஸ்திரேலியா களமிறங்க உள்ளது.



இந்த நிலையில், இந்த தொடர் தொடர்பாக செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த ஆஸ்திரேலிய கேப்டன் பேட் கம்மின்ஸ் கூறியதாவது, சொந்த மண்ணில் விளையாடும் போது எப்போதும் அழுத்தம் இருக்கும். இந்தியா மிகவும் திறமையான அணி, இதனால் தொடர் ஒரு நல்ல சவாலாக இருக்கும். பார்டர்-கவாஸ்கர் டிராபியை வெல்வது மிகவும் சிறப்பாக இருக்கும். இந்தியா ஒரு பெரிய அணி , ஆனால் நாங்கள் நன்கு தயாராக இருக்கிறோம். என தெரிவித்தார்.

### இன்னும் 6 விக்கெட்டுகள்தான்...

# அஸ்வின் சாதனை படைக்க வாய்ப்பு



**பெர்த், நவ. 22-**

இன்னும் 6 விக்கெட்டுகள்தான், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அஸ்வின் பிரமாண்ட சாதனை படைக்க வாய்ப்புள்ளது.

**5 போட்டிகள்...**

இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கோப்பை தொடரின் முதலாவது போட்டி இன்று தொடங்க உள்ளது. இந்த தொடர் இம்முறை ஆஸ்திரேலியாவில் 5 போட்டிகள் கொண்டதாக நடைபெற உள்ளது. ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற கடந்த 2 பார்டர் - கவாஸ்கர் கோப்பை தொடர்களிலும் இந்தியாவே வென்றுள்ளது. இதனால் சொந்த மண்ணில் இந்தியாவின் ஹாட்ரிக் வெற்றி கனவை முறியடிக்க ஆஸ்திரேலியா முழு மூச்சுடன் களமிறங்க உள்ளது.

**முன்னேற முடியும்...**

மறுமுனையில் இந்த தொடரில் குறைந்தபட்சம் 4-0 என்ற கணக்கில் வென்றால் மட்டுமே உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியும் என்ற இக்கட்டான சூழலில் இந்தியா களமிறங்க உள்ளது. இதனால் இந்த டெஸ்ட் தொடர் எதிர்பார்ப்பை உள்ளாக்கியுள்ளது. இத்தகைய சூழலில் நாளை முதல் போட்டி தொடங்க உள்ளது. இந்நிலையில் இந்த முதல் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின் பிரமாண்ட சாதனை படைக்க வாய்ப்புள்ளது.

**முதலிடத்தில்...**

டெஸ்ட் கிரிக்கெட்டில் சுவாரசியத்தை அதிகரிக்கும் நோக்கில் ஐ.சி.சி. அறிமுகப்படுத்திய டெஸ்ட் சாம்பியன்ஷிப்பில் அஸ்வின் இதுவரை 194 விக்கெட்டுகள் வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார். இந்த போட்டியில் இன்னும் 6 விக்கெட்டுகள் கைப்பற்றினால் டெஸ்ட் சாம்பியன்ஷிப்பில் 200 விக்கெட்டுகள் கைப்பற்றிய முதல் வீரர் என்ற பிரமாண்ட உலக சாதனையை அவர் படைப்பார். இந்த பட்டியலில் 187 விக்கெட்டுகளுடன் நாதன் லயன் 2-வது இடத்திலும், கம்மின்ஸ் 175 விக்கெட்டுகளுடன் 3-வது இடத்திலும் உள்ளனர்.

# கோலி குறித்து நான் எதுவும் சொல்ல வேண்டியதில்லை

### இந்திய கேப்டன் பும்ரா ஓபன் டாக்



**பெர்த், நவ. 22-**

ஆஸ்திரேலியாவில் சிறப்பாக செயல்படுவதற்கான அறிகுறிகள் விராட் கோலி எடுத்த கடுமையான பயிற்சிகளில் பார்த்ததாக கூறியுள்ள இந்திய அணியின் கேப்டன் பும்ரா, அவர் குறித்து நான் எதுவும் சொல்ல வேண்டியதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**வலை பயிற்சியில்...**

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் இன்று தொடங்குகிறது. இந்த போட்டிக்கு தயாராகும் பொருட்டு இந்திய வீரர்கள் பெர்த்தில் உள்ள வாகா மைதானத்தில் வலை பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

**இந்தியா சாதனை...**

கடைசியாக தங்களுடைய சொந்த ஊரில் நடைபெற்ற 2 தொடர்களையும் முதல் முறையாக வென்று இந்தியா சாதனை படைத்தது. எனவே இம்முறை எப்படியாவது இந்தியாவை தோற்கடித்து தொடரை வெல்ல ஆஸ்திரேலியா தயாராகியுள்ளது. மறுபுறம் சமீபத்தில் நியூசிலாந்திடம் சந்தித்த தோல்வியால் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு செல்ல ஆஸ்திரேலியாவில் 4 போட்டிகளை வெல்லும் முனைப்புடன் இந்தியா விளையாட உள்ளது.

**கோலியின் பார்ம்...**

இந்த தொடரில் இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலியின் பார்ம் கவலை அளிக்கும் விதமாக உள்ளது. ஆனால் ஆஸ்திரேலிய மண்ணில் அவர் சிறப்பாக செயல்படுவார் என்று பல முன்னாள் வீரர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்நிலையில் ஆஸ்திரேலியாவில் சிறப்பாக செயல்படுவதற்கான அறிகுறிகள் விராட் கோலி எடுத்த கடுமையான பயிற்சிகளில் பார்த்ததாக இந்திய அணியின் கேப்டன் பும்ரா கூறியுள்ளார்.

**ஒரு சிறந்த வீரர்...**

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு:- "விராட் கோலியை பற்றி நான் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. அவர் நம்முடைய விளையாட்டின் ஒரு சிறந்த வீரர். அவருக்கு எந்த ஸ்பெஷலான உள்ளீடுகளையும் நான் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவர் எங்களுடைய லீடர்களில் ஒருவர். அவருக்கு கீழ்தான் நான் இந்தியாவுக்காக விளையாட அறிமுகமானேன். அவருக்கு நாம் என்ன செய்கிறோம் என்பது தெரியும்.

**பரவாயில்லை...**

உங்களுடைய கெரியரில் ஒரு சில தொடர்களில் மேடு பள்ளங்கள் அமையும். அது பரவாயில்லை. ஆனால் தற்சமயத்தில் அவருடைய தன்னம்பிக்கை மற்றும் தயாராகும் விதத்தில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அவர் இந்தியாவின் வெற்றிகளில் பங்காற்றுவதற்காக காத்திருக்கிறார். அவர் சிறப்பாக செயல்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதைப்பற்றி அதிகமாக சொல்லி நான் பாழ்படுத்த விரும்பவில்லை. விராட் கோலி தற்போது நல்ல வடிவத்தில் தெரிகிறார்" என்று கூறினார்

### பெர்த் டெஸ்ட் போட்டி:

## நடுவர்களை அறிவித்தது ஐ.சி.சி.



**பெர்த், நவ. 22-**

இன்று தொடங்கவுள்ள பெர்த் டெஸ்ட் போட்டிக்கான நடுவர்களின் விவரங்களை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

**ரசிகர்கள் எதிர்பார்ப்பு...**

கிரிக்கெட் ரசிகர்களை மிகுந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கி இருக்கும் இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கோப்பை தொடர் இன்று தொடங்குகிறது. கிரிக்கெட் உலகின் பலம் வாய்ந்த இரு அணிகள் மோத உள்ளதால் இந்த தொடர் எதிர்பார்ப்பை எகிற வைத்துள்ளது. இந்த நிலையில், இந்த போட்டிக்கான நடுவர்கள் விவரத்தை ஐசிசி அறிவித்துள்ளது.

**நடுவர்கள் யார்..?**

1) **கள நடுவர்கள்: ரிச்சர்ட் (இங்கி.), கபேனி (நியூசி.).**
2) **3-வது நடுவர்: இல்லிங்வொர்த் (இங்கிலாந்து).**
3) **4-வது நடுவர்: சாம் நோகாஜ்ஸ்கி (ஆஸ்திரேலியா).**

### கடந்த 3 ஆண்டுகளில் மட்டும்

# 12,317 இதய நோயாளிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர்

### அமைச்சர் மா. சுப்பிரமணியன் தகவல்

**ஈரோடு, நவ. 22-**

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 12 ஆயிரத்து 317 இதய நோயாளிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் ஆசனூர் அடுத்த அரேப்பாளையம் மைராடா வளாகத்தில் திராவிட கழகத்தலைவர் கி.வீரமணியின் 92-வது பிறந்தநாளை முன்னிட்டு பழங்குடி மக்களுக்கான இலவச மருத்துவ முகாமை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியம், முத்துச்சாமி ஆகியோர் தொடங்கி வைத்தனர். பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

முதல்வரின் வழிகாட்டுதலின்படி இந்த மூன்றரை ஆண்டுகளில் மட்டும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 1333 கட்டிடங்கள் புதிய கட்டித் தரப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையை பொறுத்த வரை 8 ஆயிரத்து 713 துணை சுகாதார நிலையங்கள், 2 ஆயிரத்து 286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி ஒரு அறிக்கை வெயிட்டுள்ளார். அதில் 2023-ம் ஆண்டு தவறான சிகிச்சையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். எலி மருந்துக்கு பதிலாக மாற்ற ஊசி போடப்பட்டது என கூறி உள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 12 ஆயிரத்து 317 இதய நோயாளிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர். 2021-ம் ஆண்டு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் மருத்து பெட்டகத்தை பொதுமக்களுக்கு கொடுத்து தொடங்கி வைத்தார். அந்த திட்டத்தில் 2 கோடி பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்.

வரும் 29-ம் தேதி விழுப்புரத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் 2 கோடியாவது பயனாளர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் வழங்குகிறார். இது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# சாமானியர்களுக்கு சொத்து வரி உயர்த்தப்படவில்லை

### அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்

**திருச்சி, நவ. 22-**

தமிழகத்தில் சொத்துவரி சாமானிய மக்களுக்கு உயர்த்தப்படவில்லை என்று அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

திருச்சியில் நேற்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் கே.என்.நேரு பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழகத்தில் சொத்துவரி சாமானிய மக்களுக்கு உயர்த்தப்படவில்லை. 10, 15 ஆண்டு காலம் உயர்த்தாமல் இருந்த சொத்து வரியை திடீரென்று அதிகப்படியாக உயர்த்தினால் மக்கள் சிரமப்படுவார்கள் என்பதற்காக சொத்து வரியை உயர்த்துவதற்காக புதிய வழிமுறைகளை நகராட்சி நிர்வாகத் துறை எடுத்துள்ளது. 600 சதுர அடிக்கு கீழே உள்ள கட்டிடங்களுக்கு சொத்து வரி உயர்வு இல்லை. 600-ல் இருந்து, 1200 சதுரடி உள்ளவர்களுக்கு, 25 சதவீதத்திலிருந்து, 35 சதவீதம் வரையிலும், 1,200 சதுர அடியில் இருந்து, 1,800 சதுரஅடி வரை, 50 சதவீதம், 1,800-ல் இருந்து, 2,400 சதுர அடி வரை, 70 சதவீதம், அதற்கும் மேல் பரப்பளவு கொண்ட கட்டிடங்களுக்கு 100 சதவீதம் என சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது.

ஆண்டுக்கு, 6 சதவீதம் சொத்து வரி உயர்த்த சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இயற்கை பேரிடர் மற்றும் மழைக் காலங்களில் அதை நிறுத்தி வைப்பது அரசாங்கத்தின் வழக்கம். அதனால் தொடர்ந்து தமிழகத்தில் பல இடங்களில் சொத்துவரி பெரிதாக உயர்த்தப்படவில்லை. மழைக்காலம் முடிந்த பிறகு அனைத்து பகுதிகளிலும் புதிய சாலைகள் அமைக்கும் பணி தொடங்கும். மழைக் காலத்தில் சாலை அமைத்தால் சரியாக இருக்காது. சாலை சேதமாகி விடும். அதனால் புதிய சாலை அமைக்க கொஞ்சம் தாமதம் ஏற்படுகிறது.

கோவை, ஆவடி மாநகராட்சிகளைத் தொடர்ந்து திருச்சியிலும் வீடு, வணிக நிறுவனங்களுக்கு மீட்டர் பொருத்தி 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. திருச்சியில் சில பகுதிகளில் மட்டும் முதலில் இத்திட்டம் சோதனை முறையில் நடைமுறைப்படுத்தப்படும். எதிர்க்கட்சிகள் சொல்வது போல் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டு போய்விடவில்லை.

தேர்தல் வர உள்ளதால் அரசியல் செய்வதற்காக இது போன்று பேசுகிறார்கள். அதெல்லாம் உண்மை இல்லை.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சிறப்பாக உள்ளது. திருச்சிக்கு ஆய்வுக் கூட்டம் நடத்த தமிழக முதல்வர் விரைவில் வருவதாக கூறியிருக்கிறார். திருச்சி பஞ்சப்பூர் பகுதியில் அமைய உள்ள புதிய ஒருங்கிணைந்த பேருந்து முனையம், மணப்பாறை சிப்காட் தொழிற்பேட்டையில் 5 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் புதிய தொழிற்சாலை போன்ற அனைத்து திட்டங்களையும் முதல்வர் விரைவில் தொடங்கி வைப்பார். அதற்காக அவரிடம் தேதி கேட்டிருக்கிறோம். பஞ்சப்பூர் பேருந்து முனையம் பொங்கல் பண்டிகைக்குள் திறப்பதற்காக வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. குடியிருப்பு பகுதிகளை வணிக வளாகம் ஆக மாற்றினால் அவர்களுக்கு வணிக பயன்பாட்டுக்கான வரி வசூல் செய்யப்படும் என்று அவர் கூறினார்.

### மனிதவள மேலாண்மை செயல்பாடுகள்:

# அமைச்சர் கயல்விழி ஆய்வு

**சென்னை, நவ. 22-**

முதல்வர் மு.க. ஸ்டாலினின் அறிவுறுத்தலின்படி, மனிதவள மேலாண்மைத் துறை மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலன் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், மனிதவள மேலாண்மைத் துறை குறித்த அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் மனிதவள மேலாண்மைத் துறையின் பணிகளான அரசுத் துறைகளின் நிர்வாகம் மற்றும் தேவைகேற்ப அரசுப்பணியாளர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே கணித்தல், மனித வளம் தொடர்புடைய வழிகாட்டு நெறிமுறைகள், விதிகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுதல், அவற்றை தொடர்ச்சியாக கண்காணித்தல், அரசுப் பணிக்கான உரிய நபர்களைத் தேர்ந்தெடுத்தல், பயிற்சி அளித்தல் ஆகிய திட்டங்கள் குறித்து மாண்புமிகு மனிதவள மேலாண்மைத் துறை மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலன் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு அரசுப் பணியாளருக்கான திட்டங்களை நல்ல முறையில் விரைந்து செயல்படுத்திடுமாறு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் சமயமூர்த்தி, பயிற்சித் துறை தலைவர் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் விக்ரம் கபூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சார்ந்த காவல் துறை தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஜாமீன் வழங்கி நீதிமன்றம் உத்தரவு:

# சிறையிலிருந்து வெளியே வந்தார் நடிகை கஸ்தூரி

**சென்னை, நவ. 22-**

நடிகை கஸ்தூரிக்கு எழும்பூர் நீதிமன்றம் நிபந்தனைகளுடன் ஜாமீன் வழங்கி இருந்த நிலையில், புழல் சிறையிலிருந்து ஜாமீனில் வெளியே வந்தார்.

கடந்த 3-ந்தேதி சென்னையில் பிராமண சமூகத்தினர் சார்பில் நடந்த கூட்டத்தில், தெலுங்கு மக்கள் குறித்து நடிகை கஸ்தூரி அவதூறாக பேசியதாக எழுந்த குற்றச்சாட்டின்பேரில் மதுரை திருநகர் காவல்நிலையத்தில் நாயுடு மகாஜன சங்கத்தினர் புகார் அளித்தனர். அந்த புகாரின்பேரில் கஸ்தூரி மீது வழக்குப்பதிவு செய்த போலீசார், விசாரணைக்கு ஆஜராகக்கோரி கஸ்தூரிக்கு சம்மன் அனுப்பினர்.

இதனிடையே, தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் அருகே உள்ள பப்பலக் குண்டா பகுதியில் சினிமா தயாரிப்பாளர் ஹரிகிருஷ்ணனின் பங்களாவில் தங்கியிருந்த கஸ்தூரியை தனிப்படை போலீசார் கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி புழல் மகளிர் சிறையில் அடைத்தனர். அவரை வரும் 29-ந்தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க கோர்ட்டு உத்தரவிட்டிருந்தது.

இதற்கிடையே, நடிகை கஸ்தூரி ஜாமீன் கோரி எழும்பூர் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு, நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, நடிகை கஸ்தூரி தரப்பில், தனக்கு ஆட்டிசம் பாதித்த குழந்தை இருப்பதாகவும், அதனை கருத்தில் கொண்டு தனக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து, இந்த வழக்கில் நடிகை கஸ்தூரிக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி நீதிபதி உத்தரவிட்டார்.

கஸ்தூரியை ஜாமீனில் விடுவிக்க எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், சென்னை புழல் சிறையிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். அப்போது சிறைக்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்த கஸ்தூரி கூறியதாவது; "என்னை நேசிக்கும் தமிழக அரசுக்கு நன்றி. அரசியல் வித்தியாசம் பாராமல் எனக்கு ஆதரவு தெரிவித்த தலைவர்கள், நண்பர்களுக்கு நன்றி. எனக்காக வாதாடிய வழக்கறிஞர்களுக்கு நன்றி. தெலுங்கானா, ஆந்திரா மக்களுக்கும் மிகப் பெரிய நன்றி. சிறு குரலாக இருந்த என்னை சீறும் புயலாக மாற்றிய அனைவருக்கும் நன்றி." இவ்வாறு அவர் பேசினார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, சென்னை திருவான்மியூரில் நடைபெற்ற மு.க.முத்து-சிவகாமசுந்தரி தம்பதியரின் மகள் வழிப்பேத்தியும், சி.கே.ரங்கநாதன்-தேன்மொழி ரங்கநாதன் தம்பதியரின் மகளுமான தரணீஸ்வரி-ஆகாஷ் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் க.பொன்முடி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், கனிமொழி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை நேற்று, இந்த ஆண்டிற்கான நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்கியதையொட்டி, நாகூர் தர்கா ஆலோசனைக்குழு தலைவர் சையது முகமது கலீபா சாஹிப் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் உள்ளார்.




சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற 'உலக மீன்வள தின' விழாவில் மீன்வளம்-மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஒருங்கிணைந்த வண்ண மீன் வளர்ப்பிற்கான மானிய விலையில் பயனாளிகளுக்கு குளிர்காப்பு பெட்டி பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்களை வழங்கினார்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று, திருவள்ளூர் மாவட்டத்தில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் திட்ட பகுதிகளில் கட்டுமான பணிகளின் முன்னேற்றம் குறித்தும் மற்றும் பயனாளிகள் தேர்வு குறித்தும் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், சா.மு.நாசர் ஆகியோர் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தலைமைச்செயலகத்தில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் மனிதவள மேலாண்மைத்துறையின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தி ஆர்டர் ஆப் எக்சலன்ஸ்:

# பிரதமர் மோடிக்கு கயானா நாட்டின் உயரிய விருது

**ஜார்ஜ் டவுன், நவ. 22-**

கயானா நாட்டின் உயரிய தேசிய விருது 'தி ஆர்டர் ஆப் எக்சலன்ஸ்' விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி 3 நாடுகளுக்கான தனது அரசு முறை சுற்றுப்பயணத்தின் முதற்கட்டமாக நைஜீரியா சென்று, அந்நாட்டு அதிபரை சந்தித்தார். நைஜீரியா பயணத்தை முடித்துக் கொண்டு பிரேசில் சென்ற அவர், அங்கு நடைபெற்ற ஜி-20 உச்சிமாநாட்டில் கலந்து கொண்டார். அதனை தொடர்ந்து கயனா நாட்டிற்கு பிரதமர் மோடி சென்றடைந்தார்.



கயானா தலைநகர் ஜார்ஜ் டவுன் சென்ற பிரதமர் மோடிக்கு, உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கயானா அதிபர் முகமது இர்பான் அலியை பிரதமர் மோடி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் கயானா அதிபர் முகமது இர்பானுடன் சேர்ந்து பிரதமர் மோடி மரக்கன்று நட்டார்.

இந்த நிலையில், பிரதமர் மோடிக்கு கயானா நாட்டின் உயரிய தேசிய விருதான 'தி ஆர்டர் ஆப் எக்சலன்ஸ்' விருது வழங்கப்பட்டுள்ளது. கயானா அதிபர் முகமது இர்பான், பிரதமர் மோடிக்கு இந்த விருதை வழங்கி கவுரவித்தார். இதன்மூலம் கயானாவின் உயரிய தேசிய விருதை பெறும் 4-வது வெளிநாட்டு தலைவர் என்ற பெருமையை பிரதமர் மோடி பெற்றுள்ளார்.

பிரதமர் மோடியின் தொலைநோக்கு சிந்தனைக்காகவும், வளரும் நாடுகளின் உரிமைகளை உலக அரங்கில் நிலைநாட்டியதற்காகவும், உலக சமூகத்திற்கு சிறப்பான சேவை செய்ததற்காகவும், இந்தியா-கயானா உறவுகளை வலுப்படுத்துவதில் அவரது அர்ப்பணிப்புக்காகவும் இந்த விருது வழங்கப்பட்டதாக கயானா அரசு தெரிவித்துள்ளது.

இந்த விருதை இந்திய மக்களுக்காகவும், இந்தியா-கயானா மக்களிடையே நிலவும் வரலாற்று உறவுக்காகவும் அர்ப்பணிப்பதாக மோடி தெரிவித்தார். மேலும் இந்தியா-கயானா நட்புறவை வலுப்படுத்துவதில் இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கு தனது அரசு முறை சுற்றுப்பயணம் ஒரு சான்றாகும் என்று மோடி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது குறித்து பிரதமர் மோடி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "கயானாவின் உயரிய கவுரவமான 'தி ஆர்டர் ஆப் எக்சலன்ஸ்' விருதை எனக்கு வழங்கியதற்காக அதிபர் டாக்டர் இர்பான் அலிக்கு மனப்பூர்வமான நன்றி. இது 140 கோடி இந்திய மக்களுக்கு கிடைத்த அங்கீகாரம்" என்று பதிவிட்டுள்ளார்.

அதே போல் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில், "கயானாவின் மிக உயரிய தேசிய விருது பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டிருப்பது, இந்தியாவிற்கு மற்றொரு சிறப்பான தருணம். உலகளாவிய தெற்கு பிராந்தியத்தின் உரிமைகளுக்காக பிரதமர் மோடி பாடுபடுவதையும், இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தை உலகத்துடன் பகிர்ந்துகொள்வதையும் குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ள இந்த விருது, அவரது தொலைநோக்கு தலைமைக்கு கிடைத்த உண்மையான அங்கீகாரமாகும்" என்று தெரிவித்துள்ளார்.

# டங்ஸ்டன் சுரங்கத்துக்கு அனுமதி ஏதும் தரவில்லை

## தமிழ்நாடு அரசு விளக்கம்

**சென்னை, நவ. 22-**

மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு அனுமதி எதுவும் வழங்கவில்லை என தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

மதுரை மாவட்டம் நாயக்கர்பட்டி பகுதியில் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பில் டங்ஸ்டன் கனிமம் எடுக்க மத்திய அரசு டெண்டர் விடுத்தது. டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு தமிழக அரசு அனுமதி அளிக்கக்கூடாது என அன்புமணி ராமதாஸ், டிடிவி தினகரன், ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் வலியுறுத்தி இருந்தனர். இந்த நிலையில், மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு அனுமதி எதுவும் வழங்கவில்லை என தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது;

"மத்திய அரசால் 24.06.2024-ல் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாயக்கர்பட்டி கிராமத்தில் டங்ஸ்டன் கனிமத்திற்கு ஆய்வுடன் இணைந்த சுரங்கக் குத்தகை உரிமம் வழங்க ஏல அறிவிப்பு செய்யப்பட்டு, 07.11.2024 அன்று இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்தினை தகுதியான நிறுவனமாக சுரங்க அமைச்சகத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக, அந்நிறுவனத்திடமிருந்து தமிழக அரசு எந்த விண்ணப்பமும் பெறவில்லை எனவும், அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### பள்ளியில் கொலை செய்யப்பட்ட

# ஆசிரியை குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிவாரண நிதி

## அமைச்சர் கோவி. செழியன் நேரில் வழங்கினார்

**பட்டுக்கோட்டை, நவ. 22-**

பட்டுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் கொலை செய்யப்பட்ட ஆசிரியை ரமணியின் பெற்றோரிடம் ரூ.5 லட்சத்திற்கான காசோலையை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் நேற்று வழங்கினார்.

தஞ்சை மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் அரசு பள்ளி வளாகத்தில் ஆசிரியை ரமணி குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. இந்த கொடூர செயலில் ஈடுபட்ட மதன்குமாரை போலீசார் கைது செய்தனர்.

இந்த நிலையில் கொலை செய்யப்பட்ட ரமணியின் குடும்பத்திற்கு அரசு சார்பில் ரூ.5 லட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கிட முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி நேற்று முதல்வரின் உத்தரவுப்படி பட்டுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் ரமணியின் பெற்றோரிடம் ரூ.5 லட்சத்திற்கான காசோலையை உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார். அப்போது முரசொலி எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் அண்ணாதுரை, அசோக்குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.



அ.தி.மு.க. 53-வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 6-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் விளாங்குடி சித்தன் தலைமையில் புதுவிளாங்குடி காமாட்சி நகரில் அ.தி.மு.க. கொடியை ஏற்றி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், எம்.ஜி.ராமச்சந்திரன், வி.பி.ஆர்.செல்வகுமார், கவுன்சிலர் நாகஜோதிசித்தன், நீதிகாந்த், மலர்விழிமற்றும் வட்ட செயலாளர்கள் பி.என்.சுந்தர்ராஜன், கறிக்கடை மலைச்சாமி, சேகவன், விஜயகுமார்,நாராயணன், ஜஸ்டிஸ்ராஜா மற்றும் ஐ.டி.விங்க் கந்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.